Registered No. M. 2330 'SIDDHANTHA[M]'
Vol. 25—No. 1[0]

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 25	நந்தன ஐப்பசி 1952 அக்டோபர்	இதழ்


பத்திராசிரியர் : சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர் : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை


சைவ சித்தாந்த மகா சமாஜம்

53, திருவள்ளுவர் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15

ஈரோட்டுக் கோட்டை



தொண்டீசர் கோயில்
முன் கோபுரமும் மண்டபமும்



தொண்டீசர் கோயில்
அம்மன் முன் மண்டபம்

Reg. M. 2330

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வானியையஉள் நாடு

மலர் 25 | நந்தன ஐப்பசி 1952 அக்டோபர் | இதழ் 10

நாட்டு ஒலி

1. அறங்கள் : சின்னஞ் சிறு குழந்தையிலேயே 'அறஞ்செய விரும்பு' எனப் பழக்குகின்றோம். பிறகு வயது வந்த பிறகு அறம் செய்யத் தலைப்படுகின்றோம். அவ்வறம் சாதாரணமாக ஏழைகளுக்கு உணவு அளித்தல் என்ற வகையில் நின்றிருந்தது. மற்றும் பொருள் படைத்தோர் சத்திரம் அமைத்தல் கோயில் கட்டுதல் முதலிய வகைகளில் ஈடுபட்டனர். தற்காலத்தில் பாடசாலை வைத்துக் கல்வி கற்பித்தல், நோயாளிகளுக்கு மருத்துவச்சாலை அமைத்தல் முதலியவைகளைச் செய்து வருகிறார்கள். ஆனால் பண்டைத் தமிழர்களோ அறங்களை முப்பத்திரண்டாக வகுத்து அவைகளை முறையே செய்து வந்தார்கள். தற்காலத்தில் எந்த அறங்கள் சிறந்தன என்று எண்ணுகிறோமோ அவைகளும் அந்தத் தொகுதியில் சேர்ந்திருக்கின்றன. அவற்றில் சிலவற்றை எடுத்துக் காட்டுக்களாகக் கூறுவோம். ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு, சிறைச்சோறு, மகப்பால் வார்த்தல், அனாதைப்பிணம் சுடல், நோய் மருந்து, கண்நோய், பிறர் துயர் காத்தல், தண்ணீர்ப் பந்தல், கா வைத்தல், விலங்கிற்குணவு முதலிய செயல்கள் – வெறும் உணவு, காசு ஈதலைக் காட்டிலும் சிறந்தன என இந்நாளிலும் ஒத்துக் கொள்ளப்படுகின்றன அல்லவா?

இனி, காஞ்சியில் எழுந்தருளியிருக்கும் பெருமாட்டிக்கே அறம் வளர்த்த நாயகி என்ற சிறப்புப் பெயர் இருப்பதை இங்கு நினைவு படுத்திக்கொள்ள வேண்டும். பிராட்டியார் பெருமானை நோக்கி, 'தான் அறம் வளர்க்க வேண்டும்' என வழுத்த, பெருமான் இருநாழி நெல் அளித்து 'அதனை உலகிற்குக் கொண்டு சென்று உழவுத் தொழிலால் பெருக்குக' என அவ்வாறே கங்கை நாட்டு உழவர்பால் நெல் அளித்துப் பெருக்கச் செய்து காஞ்சி அடைந்து தவம் செய்து அந்நெறி கொண்டு உழவால் அதைப் பெருக்கி அறம் வளர்த்தினள் என்பது புராண வரலாறு. இவ்வாலாற்றினால் மக்கள் எவ்வாறு அறம் வளர்த்தல் வேண்டும் என்று அறியக்கூடும். பிறரிடம் பிச்சையெடுத்துத் திருமலையில் அறம் செய்யும் தற்கால வழக்கு, சீரானதன்று என்று அது கூறுகிறது. தாமே முயற்சி செய்து வருவாய் பெற்று அது கொண்டு அறம் செய்தலே சிறப்புடையது என்று அது அறிவிக்கின்றது. அவ்வாறான அறங்கள் பண்டைக் காலத்தில் மிகவும் செய்யப்பட்டன என்க.

2. சமய அறங்கள்: மேலே கூறிய அறங்கள் எல்லாம் பொது அறங்கள். அதாவது சமூக அறங்கள். இவைகளே யன்றிச் சமய அறங்கள் பல உண்டு. சமய நிலையங்கள், சமய வாழ்க்கைகள், சமயக் கல்வி, சமயச் சடங்குகள் முதலிய சார்பு உடைய அறங்கள் நிரம்ப உண்டு. நமது நாடுகளில் இவ்வகையான அறங்கள் மிகவாகப் போற்றப்பட்டன. தற்போதும் போற்றப்படுகின்றன. வடநாட்டிலே வேள்விகள் என்ற பெயரில் சமய அறங்கள் முன் காலங்களில் செய்யப்பட்டன. வடமொழி நூல்கள் அவைகளை மிகவும் விவரிக்கின்றன. அவைகள் சமயச் சடங்குகள், சமய வாழ்க்கை என்ற பாகுபாடுகளில் சேரும். பண்டைக் காலத்தில் சமயக் கல்வி, சமய வாழ்க்கை என்ற கொள்கைகளில் வனங்களில் தோன்றிய முனிவர்களின் ஆசிரமங்களில் சமய அறங்கள் போற்றப்பட்டன. தென் நாட்டிலோ மக்களோடு இணைந்த வாழ்க்கை

யில் ஈடுபட்ட சமயாசிரியர்கள் அந்தச் சமய அறத்தைக் கடைப்பிடித்துப் பொது மக்களுக்கு அற வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டுக்களாக இருந்தனர். சைவ வைணவ சமயாசாரியர்களும் பின்வந்த ஆசாரியர்களும் வனங்களுக்கு ஏகாமல் மக்களோடு மக்களாகவே இருந்து சமய அறத்தைப் போற்றினூர்கள். அவர்களைப் பின்பற்றிய அரசர் பெருமக்களோ சமய நிலையங்களைப் பெருக்கி அவைகளிலே சமய அறத்தைக் கடைப்பிடித்தார்கள். பல்லவ சோழபாண்டிய மன்னர்கள் கணக்கற்ற சைவ வைணவ ஆலயங்களைக் கட்டி அவைகள் சீராக வளர வேண்டும் என்ற நோக்கத்துடன் தானதருமங்களைச் செய்தார்கள். இந்த வகையில் தென் நாட்டில் கணக்கற்ற கோயில்கள் நாடு எங்கும் தோன்றின. அவ்வாறான கோயில்களுக்கு மேன்மை தந்து சமய எண்ணம் பரப்பிவிட்டவர்கள் சமயாசிரியர்களே. அவ்வகையில் தோன்றின கோயில்களில் சடங்குகளும் பெருகின. அவைகளோடு சடங்குகளை நடத்தும் குடும்பங்களுக்கு வாழ்க்கை நிலையும் ஏற்படுத்தப் பட்டது. அவைகள் நிம்மதியாக வாழ்வதற்கு வேண்டிய பொருளுதவியும் செய்யப்பட்டது. சமயக் கல்வியும் அதனைப் போற்றி வைக்க ஓதுதலும் புகுத்தப்பட்டன. அந்த வகையிலும் அறம் செய்ய வழிகள் வகுக்கப்பட்டன. வட நாட்டில் தபோவனங்களில் தோன்றிய வேள்வி, சடங்கு, வாழ்க்கை, கல்வி முதலியவைகளும் தென்நாட்டிலும் தோன்றின. இந்த வகையில் சமய அறங்கள் பெருகின.

3. கோயில்கள் : சமய அறங்கள் சமய நிலையங்களாகிய கோயில்களிலும் மடாலயங்களிலும் வளர்ந்தன. கோயில்களிலே கோயில் நிர்மாணம், உருவத்தாபனம், உருவ வழிபாடு, திருவிழா, அதனைச் செய்ய வருவாய், நிலம், கால்நடை, பொருள் முதலிய தானங்கள், நுந்தா விளக்கு, நந்தவனம், பொழில், குளம், கோயில், பரிவட்டம் முதலிய சாமக்கிரிகைகள் முதலிய எல்லா வகைகளும் ஏற்பட்டன. இவைகளைப் பரிபாலிக்க அர்ச்சகர் முதல்

கொண்டு திருவலகு வரையில் சிப்பந்திகளும் ஏற்பட்டார்கள். இப்பரிபாலனம் நாடோறும் பெருகிற்று. கோயில் சிறிய அளவில் இருந்த மட்டும் அதன் நிர்வாகம் சிரமமில்லை. பண வருவாயைப் பற்றியும் கவலை இல்லை. ஆனால் கோயில் பெரிதாக ஆக, மண்டபங்களும் திருவிழாக்களும் சிப்பந்திகளும் வளர வளர சொத்துக்களும் கூடிவரும். ஆகவே நிர்வாகமும் அதிகரித்துப் போகும். வருவாய்களை வசூலித்தல் அவைகளை செலவழிக்கச் சரியான திட்டம் ஏற்படுத்துதல், அவைகள் செலவாகும்போது மேல் பார்வை கண்காணித்தல், செலவான பிறகு கணக்குகளைச் சோதித்தல் முதலான பல முக்கிய அலுவல்கள் ஏற்பட்டுவிடும். அவைகள் லௌகிகச் செயல்கள். ஆனாலும் அவைகளில் மிக்க கவனம் செலுத்த வேண்டி வரும். இவைகளை உத்தேசித்தே செலவுத் திட்டங்களில் கட்டுப்பாடு புகுத்தப்பட்டது.

கோயில்களின் வழிபாடு ஒரு சிறந்த செய்கை ஆகும். அதற்காக ஊரார் வந்து சேவை செய்வார்கள். அதற்கு வேண்டிய செலவுகளுக்கு வழிபடுகின்றவர்களே பொறுப்பாளிகள். கோயில் வழிபாடு ஒன்றுக்கு மட்டுமேயன்றி வேறு பல அரியதொண்டுகளுக்கும்உத்தேசித்துத் தாபிக்கப் பெற்றது. கோயில்கள் சிற்பம், ஓவியம், இன்னிசை, நாட்டியம் என்பவைகளுக்கு ஒரு சிறந்த நடுநாயகமாகும். தென் நாட்டுக் கோயில்களில் கல்லால் செய்யப்பட்டிருக்கும் சிற்பங்கள் அரிய சமய வரலாறுகளையும் சமயக் கொள்கைகளையும் அறிவுறுத்துகின்றன. அங்கே மண்டபங்களில் சுவர்களிலும் முகடுகளிலும் பல வண்ணங்கள் கொண்ட ஓவியங்கள் சமயச் சிறப்புக்களை விளக்குகின்றன. பண்டைக்காலத் தமிழனின் அறிவு முதிர்ச்சியை இவை இரண்டும் சிறப்பிக்கின்றன. இவை இரண்டும் நிரந்தரமானவை. மற்ற நற்கலைகளான இன்னிசை, நாட்டியம் என்ற இரண்டும் கோயில்களில் திருவிழாக்களின்போது நடத்தப் பெற்றன. ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்டிருக்கும் இசைக் கருவிகள் இவ்விரண்டு கலைகளையும் நிரூபிக்கின்றன.

இவ்விரண்டு கலைகளும் சமயக் கொள்கைகளில் ஈடுபட்டு அவற்றைப் பரப்பும் செயலில் விளங்கி இருந்தன. இந்த நற்கலைகளைக் கோயில்களில் ஏற்படுத்தியதே. சமய அறச் செயல் ஆகும்.

4. ஓர் எடுத்துக்காட்டு : சில நாள்களுக்கு முன் கொங்கு நாட்டு ஈரோட்டில் அருள்நெறித் திருக்கூட்டத்தின் விழா ஒன்று அவ்வூர்க்கோட்டைச் சிவாலயத்தில் நடைபெற்றது. அப்போது குன்றக்குடி மகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளியிருந்து தலைமை வகித்தார்கள். அந்தச் சமயத்தில் ஈரோட்டுச் சிவாலயம், திருமால்கோயில் இவை இரண்டையும் ஆராயும் வாய்ப்புக் கிடைத்தது. அவ்விருகோயில்களின் அமைப்பும், அவைகள் வைக்கப்பட்டிருக்கும் ஒழுங்கும், அங்கு நடைபெறும் தமிழ் வழிபாடும் எல்லாருடைய மனதையும் கவர்ந்தன. அவ்விரண்டு கோயில்களிலும் பண்டைக் கல்வெட்டுச் சாசனங்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றிச் சில உரைகளும் நிகழ்த்த வேண்டி வந்தது. அச்சாசனங்களில் தமிழர்கள் செய்து வந்த சில சமய அறங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அவைகள் பொதுவாக எந்தக் கோயில் கல்வெட்டுக்களிலும் காணப்பட்ட போதிலும் பெரும்பான்மையான மக்களுக்கு மறைமுகமாகவே இருக்கின்றன. ஆகவே அவைகளில் கண்ட சில முக்கியமான குறிப்புக்களை இங்கே எடுத்துக் கூறுவோம் :

ஈரோட்டுக் கோட்டைச் சிவாலயம் கிழக்கு நோக்கியிருக்கிறது. திருமால் ஆலயம் தெற்கு நோக்கி இருக்கிறது. கட்டடங்கள் கருங்கல் திருப்பணி. தற்போது சிவாலய மூர்த்தி அர்த்த கபாலீசர் என்றும் திருமால் இரங்கநாதர் என்றும் பெயரிடப்பட்டுள்ளார்கள். ஆனால் கல்வெட்டுக்களின்படி திருத்தொண்டீசுரர், பள்ளிகொண்ட பெருமாள் என்று பெயர் பெற்றிருக்கின்றன. ஈரோடு என்ற பெயரைப் பிசகாக, ஈர + ஓடு, இரு + ஓடு, என்று கொண்டதினால் தற்கால வட மொழிப் பெயர் ஏற்பட்டது. தொண்

டீசர் என்றதே சரியான பெயர். இந்த நாடு மேல்கரைப் பூந்துறை நாடு, அதில் ஒரு பகுதி காஞ்சிக்குண்டம், அதில் உள்ளது ஈரோடு என்ற ஊர், அதன் மற்றொரு பெயர் மூவேந்திர சதுர்வேதி மங்கலம் முதலிய செய்திகள் காணப்படுகின்றன.

மேலும் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அறங்களாவன :

1. இரவிகோதை என்ற கோள மன்னன் - 4-ஆண்டில் பூவாணிய நாட்டு ஆவணி பேரூர் அச்சன் சோமன் மாமணி - என்பவன். நிலத்து விளைவில் நாலில் ஒரு பங்கு.
2. ஷை 22-ஆண்டில் - வடகரை நாட்டு அந்தியூரில் நிலம்.
3. வீர வல்லாள தேவன் என்ற ஹொய்சள அரசன். 1340 கி. பி. யில் பூந்துறை நாட்டுத் தண்டல் ஊர்.
4. வெங்கடபதிராயர் 1579. கி. பி. யில் இரண்டு கோயில்களுக்குமாக நிலம்.
5. வீரபாண்டியதேவர் 10 ஆண்டு (கொங்கு பாண்டியன்).
6. வீர சிங்கராயர் - பிரமோதூத ஆண்டில் இரண்டு கோயில்களுக்கும் தானம்.
7. வீரராய தவக்க மறை நாயக்கர் - 1504ல் நிலம்.
8. பர்வத ராகுத்தன் (உம்மத்தூர் மன்னன்) 1510ல் பணம் தானம்.

மேலும் இவ்வாறு தானம் தந்த நிலங்களைப்பற்றி விவரிக்கும்போது சாசனங்களில் ஆளப்பட்ட உரை நடையைச் சற்று ஆராயலாம்.

"எழுவன, முளைப்பன, தெங்கு, பனையும் கல்லும் காஞ்சனமும், மற்றும் கழியிறை உள்ளதும்"

"முன்குளமும் பின்குளமும் மேனோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறும், உடும்போடி, ஆமை தவழும் நிலம், கற்றுப்புல் போகா முற்றூட்டும்"

இனி, நிலத்து ஆதாயங்களைக் குறிக்கும்போது குறிக்கப்பட்டவைகள் :—

" கடமை நிச்சியிப்பு, காணம், எண்ணெய் நெய், கார்த்திகைப் பச்சை, திருமுன் காட்சி, நல்லெருது, நற்பசு, கொணிலை, விரிமுட்டு, தறிஇறை, தட்டார்ப் பாட்டம், ஈழம்புஞ்சை, அணி இடுவான்வரி, நத்தவரி, பணவாசி, கண் கூலி "

மற்றும், கோயிலில் செய்யப்பட்ட வழிபாடுகளைப் பற்றிக் கூறுவன :—

" அமுதுபடி, சாத்துபடி, திருமேற் பூச்சு, சந்தியா தீபம், திருவிளக்கு, திருப்பணி, திருநாட் தேவை, அவி, பெலி, அர்ச்சனை, நித்தகர்மம், பலபடி நிமந்தம்"

இனி, தர்மங்கள் காப்பதற்குரிய உரைகள் :

" இத்தன்மம் காத்தான் அடி என்தலைமேலது "

" இது இறக்குவான்வழி எழெச்சம் மொழியாமல் அறுவான் "

" பன்மாகேஸ்வர ரக்ஷை "

" விலக்கின பேர்கள் கங்கைக்கரையில் காராம் பசுவையும் பிராமணனையும் கொன்ற தோஷத்தில் போகக் கடவர் "

" இந்தத் தன்மத்தை உண்டுபண்ணி நடத்தின பேர்கள் சுவாமி திருவுளப்படி சகல ஐஸ்வரியமும் பெறவும்"

இவ்வுரைகளைக் காணும்போது அக்கால மக்கள் அறச் செயல்களை எந்த நிலையில் போற்றினார்கள் என்று அறியலாம். இப்படிப்பட்ட கடுமையான நிபந்தனைகள் ஏற்படுத்தியிருந்தும் நமது கோயில்கள் எவ்வாறாகப் பாழடைந்து வந்திருக்கின்றன என அறிந்தால் நமக்குக் கடவுளிடத்து அன்பு எவ்வாறு குறைந்திருக்கிறது கூறவும் வேண்டுமா?

5. அறக்காப்பு : பண்டைய நாட்களில் புது அறங்களைச் செய்வதனைக் காட்டிலும் பழைய அறங்களைப் பாதுகாப்பதில் மிகவும் கவலை எடுத்துக் கொண்டார்கள். ஒரு

முறை ஓர் அறத்தைச் செய்து வைத்தால் அந்த அறம் நிரந்தரமாக இருக்கும் பொருட்டுப் பல வழிகளிலும் அதற்குக் காப்புத் தேடி அமைத்தார்கள். ஓர் ஆலயமோ ஒரு மடமோ கட்டுவது பெரிதல்ல. அது அழிந்து போகாமல் மக்களுக்கு என்றென்றும் பயன்படும் பொருட்டுப் பாது காப்புப் பொருளும் அதனோடு சேர்த்துத் தந்தார்கள். இந்த வகையில் நமது முன்னையோர்கள் தற்காலத்திய மக்களைவிட ஒரு பங்கு உயர்ந்தவர்கள் என்று உரைக்க வேண்டும். இக்காலத்திலோ முன்னையர்கள் இயற்றி வைத்த அறங்கள் சரியானவை யல்ல என்று எண்ணி அவைகளை அழிக்கவே முயலுகிறார்கள். நாகரிக மக்களின் சட்டஞானத்திற்கு அந்தக் கொள்கை மாறுபட்டது. எவனொருவன் ஒரு நோக்கத்தை வெளிப்படுத்தி அதன்படி ஓர் அறம் செய்தானேல் அந்நோக்கம் கெடாமல் நடத்துவதே அறக்காப்பாளரின் கடமை. அதை நிராகரித்து ஏதோ சாக்குப்போக்குச் சொல்லி அறத்தை மாற்றுவதோ அறநிலையத்தை அழிப்பதோ பண்பாட்டு இலக்கணத்திற்குச் சரியல்ல. இதனைத் தற்காலத்தார்கள் கவனிக்கிறார்களா ?

பண்டைத் தமிழர் உணர்ச்சிகளை எடுத்துக் காட்டும் அடியிற்கண்ட சாசனப் பாடல்களின் பொருளை உணர்ந்து கொள்வோமாக :—

" தண்டிச் சுரனேலை, சாகரஞ்சூழ் வையகத்துக்
கண்டிச் சுரன்கருமம் ஆராய்க,— பண்டே
அறஞ்செய்தான் செய்தான், அறங்காத்தான் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து "

—திருப்பேரூர்க் கல்வெட்டு

" கொடுத்தான் அறம்பெற்றான் கொற்றவனாய்ப் பின்னை
யடுத்தான் அறங்காத்தல் வேண்டும்— கடுத்ததனை
மாற்றினா னூற்ற நாளும் மற்றதனைப்
போற்றினான் வீடு புகும் "

—சாசனப் பொதுப் பாட்டு

தென்காசிக் கோயிலில் அதைக் கட்டின பராக்கிரம பாண்டியன் வெட்டிவைத்த அடியிற் கண்ட செய்யுளில் கண்ட அழியாக் கருத்தை அறிந்து புகழுக!

“ ஆராயினுமிந்தத் தென்காசி மேவும்பொன் னாலயத்து
வாராத தோர்குற்றம் வந்தால் அப்போது அங்குவந்ததனை
நேராகவே யொழித்துப் புரப்பார்களை நீதியுடன்
பாராரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே. ”

—தென்காசிக் கல்வெட்டு

இப்பாடல்களைப் படிக்கும்போது பண்டைக் காலத்துத் தமிழர்கள் அறங்களைப் பற்றிக்கொண்டிருந்த உணர்ச்சிகளுக்கும், தற்காலத்துத் தென் நாட்டு மக்கள் கொண்டிருக்கும் உணர்ச்சிகளுக்கும் உள்ள வேற்றுமைகளை அறிந்தால் எவர்களுடைய உணர்ச்சிகள் முற்போக்கும் பண்பாடும் மிகவாகக் கொண்டு இருக்கின்றன என்பதே நம்கண் முன்னே தோன்றும்.

——

2. தலப்பகுதி

திருவாலங்காடு

(ம. ரா.)

1. இடம்: சென்னை அரக்கோணம் இருப்புப்பாதையில் சென்னையிலிருந்து 37 கல் தூரத்திலும், அரக்கோணத்திலிருந்து கிழக்கே 6 கல்தூரத்திலும் இருக்கிற திருவாலங்காடு என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே மூன்று கல் அளவில் இத்தலம் உள்ளது. கோயிலின் கோபுரம் புகைவண்டியில் போகும்போதே தெரியும். வண்டி நிலையத்தில் மாட்டு வண்டிகள் மட்டும் கிடைக்கும். பாதை மண் வெளியாகையால் ஊருக்குச் செல்வதற்கு ஒரு மணி நேரம் பிடிக்கும். ஊரில் தங்குவதற்குச் சத்திரங்கள் இருக்கின்றன.

ஊர் விசாலமாகக் கட்டப்பட்டுள்ளது. சந்நிதித் தெரு மிக அகலமாகவும் கம்பீரமாகவும் இருக்கின்றது. ஆலயம் முதல் தேரடிவரைக்கும் கால்கள் நிற்கின்றன. அதற்கு இருபுறங்களிலும் தேர்வீதி விசாலமாக யிருக் கின்றது. கோயிலைச்சுற்றிலும் மாடவீதியிருக்கின்றது. மேற்கே ஒரு பெரிய குளத்தைச் சுற்றி இலுப்பைத் தோப்புகள் இருக்கின்றன.

2. கோயில்: ஊருக்கு மேற்பகுதியில் கோயில் இருக்கின்றது; அதுமிகப் பெரியது. கோயிலைச்சுற்றிலும் உயர்ந்த மதில் இருக்கின்றது. அதன் நீளம் 1 கல் அளவு இருக்கலாம். விஜயநகரத்து அரசர்கள் அதனைக் கருங் கல்லால் கட்டியிருக்கின்றார்கள். அதற்குச் சான்று மதில் களில் அங்கங்கே குறிக்கப்பட்டுள்ள நரபதிகளின் சின்னங் களே ஆகும். அச்சின்னங்கள் வராகம், வாள், சூரிய, சந் திரர்கள் என்பனவைகளே. கோயிலின் முகத்துவாரத்தில் கோபுரம் கட்டப்படவில்லை. ஆனால் பஞ்ச மூர்த்திகளின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தெற்கிலும், வடக்கிலும், இருந்த வாயில்களை இப்போது அடைத்திருக் கிறார்கள். உட்புறத்து வாயிலின் மேல்பாப்புக் கல்லின் ஒரு புறம் ஒருபசு ஒரு லிங்கத்தின்மேல் பால் சொரிவது போல வும், மற்றொருபுறம் காமதேனு ஒருலிங்கத்தைப் பூஜிப்பது போலவும் உருவங்கள் செதுக்கப்பெற்று இருக்கின்றன. ஆலயத்திற்கு முன்புறத்தில் சந்நிதித் தெருவில் 16 கால் மண்டபம் ஒன்று இருக்கின்றது. அதற்கு முன்னால் 8 மூலை மண்டபம் ஒன்று முன் இருந்தது. இப்போது அழிந்து போய்விட்டது. வெளிமதிலுக்கு உட்புறத்தில் ஒரு பெரியகோபுரம் இருக்கின்றது. அதனை சமீபகாலத்தில் திருப்பணி செய்துள்ளார்கள். வடபுறத்தில் 100 கால் மண்டபம் ஒன்று இருக்கின்றது. இதனைச் சாமான்வைக்கும் சாலையாகவும், கோயிற்காரியாலயமாகவும் பயன் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எதிரே வாகன மண்டபம் இருக் கின்றது. அதற்கு உட்புறத்தில் ஒருமதிலும், அதில் ஒரு சிறுகோபுரமும் இருக்கின்றன. அதற்கும் உட்புறத்தில்

நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் அண்மையிலே புதுப்பித்திருக்கும் திருப்பணிவேலைகளைக் காண்போம். சுவாமியின் கோயில் முடிவாகி, கும்பாபிஷேகம் ஆனவுடன் வேலை நின்றுவிட்டது. அம்மன் கோயில் திருப்பணி தொடங்கவில்லை. அதற்கென வைத்திருந்த தொகையோ வழக்கில் சிக்கிக்கொண்டிருக்கின்றது. ஆலயம் சுத்தமாகவும் பெரிதாகவும் கட்டப்பட்டிருக்கிறது. திருப்பணிக்கு முன்பே கல்வெட்டுக்களின் படிகள் எடுத்து வைத்திருக்கிறார்கள்.

கோயிலின் மூலத்தானமும், இரத்தினசபையும் காணத்தக்கவை. அச்சபையின் முன் மண்டபத்தில் இருந்த பழைய சிற்பத்தூண்கள் முன்னிருந்தபடியே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சிற்சபையின்மேல் தாம்பிரத்தகடு வேய்ந்த முகடு இருக்கின்றது. அது சிதம்பரம் கனகசபையை ஒத்து வடிவு அமைந்தது. அதற்கு உள்ளே பாதி பாகம் சுவரால் தடுக்கப்பட்டுள்ளது. அதன் பொருள் விளங்கவில்லை. நடராஜப்பெருமான் கால்தூக்கி ஆடும் நிலையில் இருக்கின்றார். அதற்கு ஊர்த்துவதாண்டவம் என்று பெயர். எதிர்ப்புறத்தில் சிறிது மேற்கே ஒதுங்கியிருக்கிற உருவம் காளியினுடைய உருவம். அந்த உருவமும் கால் அகற்றி ஆடும் நிலையில் ஐதீகத்துக்கு ஏற்றபடி உள்ளது. அடுத்திருக்கும் உத்சவ மண்டபத்தில் பஞ்சமூர்த்திகள், காளியம்மை, காரைக்கால் அம்மை, முஞ்சிகேசர், கார்க்கோடர் முதலிய உத்சவர்கள் வைக்கப்பட்டிருக்கின்றனர். அறுபத்துமூவர் இல்லை. ஆனால் நால்வர், இருடிகள், காரைக்கால் அம்மையார் இவர்களின் மூலவர்கள் உண்டு. அர்த்த மண்டபத்தில் சாதாரண நடராஜன் இருக்கின்றார். திருப்பணி நடந்தகாலத்தில் நிலத்தின்கீழ் நடராஜ உருவங்கள் அகப்பட அவைகளைச் சென்னைக் காட்சிச்சாலைக்கு எடுத்துச் சென்று விட்டார்களாம். மூலத்தான மூர்த்தி அழகானது. அம்மன்கோயில் தெற்குச்சந்நிதி. உருவம் நடுத்தரமானது.

3. மூர்த்திகள் : சுவாமியின் பெயர் ஆலங்காட்டடிகள். வடமொழியில் வடாரண்யர். அம்மையின் பெயர்

வண்டார் குழலிஅம்மை. தீர்த்தம் முத்திதீர்த்தம். தலமரம் பலா. ஊர்ப் பெயர் ஆலங்காடு என்று அமைந்திருந்தது. பண்டைய நாளில் இந்தத்தலம் ஆலமரம் நிறைந்த காடாக இருந்ததினால் இப்பெயர் பெற்றது என்பர். அதற்கு வட மொழியில் வடாரண்யம் என்பர்.

4. ஐதிகங்கள் : இந்தத்தலத்தில் ஆதி சேட னுக்குத் திருமால் உபதேசமும், சுந்தரர் உபதேசமும், முஞ்சிகேசர், கார்க்கோடர் என்ற முனிவர்களின் வழி பாடும் அவர்களுக்காகச் சிவபெருமான் நடனமும் காளிக்கும் நடராஜருக்கும் நிருத்தப்போட்டி ஏற்பட நடராஜர் ஊர்த்துவ தாண்டவம் புரிய காளி அடைந்த தோல்வியும், இத்தலத்து ஐதீகங்கள். ஐந்து சபைகளில் ஒன்றாகிய மணி அம்பலம் என்ற இரத்தினசபை இச்சபையின் பெயர். நடராஜருக்குக் காளி தோல்வி உற்றதின் பொருள் முந்தியிருந்த சக்தி, சமயம், பின்னால் சாந்த சைவம் ஆயிற்று என்பதாகும்.

இத்தலத்திற்கு அருகில் உள்ளது பழையனூர். அங்கே நடந்தது பழையனூர் நீலிகதை. நீலிக்காக ஒரு வணிகன் பொருட்டு 70 வேளாளர்கள் தீயில் மூழ்கின கதை அது வாகும்; அவ்வேளாளர்களின் உருவங்கள் கோடாலிக் குட்டைக்கரையின் பேரில் ஒரு சதுர ஆலயத்தில் செதுக் கப்பட்டிருக்கின்றன. அதற்கருகில் தீப்பாய்ந்த அம்மன் கோயில் இருக்கின்றது. இக்கதை தேவாரத்திலும், பெரியபுராணத்திலும் சேக்கிழார் புராணத்திலும் குறிக்கப் பட்டுள்ளன.

மேலும் காரைக்கால் அம்மையார் முத்திபெற்ற தலம் இதுவாகும். அம்மையார் பாடல்கள் இதற்குமுண்டு.

5. சுற்று ஆலயங்கள் : சிவாலயத்திற்கு வட மேற்கே வடக்குநோக்கியிருப்பது காளிகோயில். மற்றும் வடக்கே இருப்பது முஞ்சிகேசமுனிவர் ஆலயம். கோயி லுக்குத் தென்மேற்கே உள்ளது திரௌபதியம்மன் கோவில். அடுத்துத் தென்கிழக்கில் $\frac{3}{4}$ கல் அளவில் உள்ள பழையனூ

ரில் மேற்குச் சந்நிதியாக ஒரு சிவாலயம் இருக்கிறது. சுவாமியின் பெயர் தழுவக்கொளுந்தீசர் ; அம்மை பெயர் ஆனந்தவல்லி. ஒரு தூணில் காரைக்கால் அம்மையார் உருவம் இருக்கின்றது. இது வைப்புத் தலம். தெற்கே மூன்று கல்லில் உள்ள மணவூரில் பழைய சிவாலயம் ஒன் றிருக்கின்றது. ஆலயம் பழுதுபட்டது. சுவாமி நந்தீசுவரர்; அம்மை ஆனந்தவல்லி. நடராஜர் வட்டப் பிரபை கொண் டது. விமானம் காஞ்சி கைலாசநாதர் விமானம்போன்றது. இங்கே ஒரு பழமொழி உண்டு. “ஆடினது ஆலங்காடு, அமர்ந்தது தக்கோலம், மணக்கோலம் கொண்டது மணவூர், சிலம்பொலித்தது சிதம்பரம்”.

6. நூல்கள் : 1. காரைக்காலம்மையார் அருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டைமணி மாலை, அற்புதத் திருவந்தாதி (முதல் நூற்றாண்டு).

2. தேவாரம் - சம்பந்தர் (7 நூ.) ; அப்பர் (7 நூ.); சுந்தரர் (9 நூ.)

3. பட்டினத்தார் பாடல் (10 நூ.)

4. திருப்புகழ் - அருணகிரிநாதர்.

5. திருவாலங்காட்டுப் புராணம் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் உண்டு. தமிழில் இயற்றினர் இன்னார் எனப் புலப்படவில்லை. விருத்தாசலம் தியாகராயக் கவிராயர் பதிப்பித்தார் (18 நூ.)

6. தலமான்மிய அகவல் - தியாகராயக் கவிராயர் இயற் றியது. தலமகிமை முழுதும் கூறுவது (19 நூ.)

7. கல்வெட்டுகள், செப்பேடுகள் : திருவாலங்காட் டில் கிடைத்த செப்பேடு மிகவும் அருமையானது. அது ராஜேந்திரன் காலத்தில் பொறிக்கப்பட்டது. வடமொழியில் பத்தும், தமிழில் இருபத்தொன்றும் ஆக 31 ஏடுகள் கொண்டது. வடமொழியில் 131 சுலோகங்கள் ; இயற்றி னவன் சங்கரன் மகன் நாராயணன்.

தமிழில் 524 அடிகள்; பொறித்தவர்கள் காஞ்சி நகரத்துச் சிற்பிகள். இதில் கி. பி. 1017ல் திருவாலங்காட்டு ஆலயத்திற்குப் பழையனூர் கிராமத்தைத் தானம் செய்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இச் செப்பேட்டில் சோழர் வம்ச பரம்பரை, அவர்கள் செய்த காரியங்கள் முதலியவைகள் குறிக்கப்பட்டுள்ளன. செப்பேட்டைத் தவிர பல கல்வெட்டுகளும் உண்டு. அவைகளில் கங்கை பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், விஜய நகரத்தார்கள், மற்றும் சில சிற்றரசர்கள் காலத்தவைகளைக் காணலாம். மற்றும் நாடு, கோட்டம், கிராமம் முதலிய பேர்களும், பல பெரியார்களின் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன. பல தானதர்மங்கள், மண்டபக்கட்டிடங்கள், தர்மசிவாசாரியார் மடம், குலோத்துங்கன் III காலத்தில் பாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்த அருள்பாக்கத்து வத்சராஜன் பெயர் முதலியவைகள் குறிக்கப்பட்டுள்ளன. செப்பேட்டின் தமிழ் நடை ஒரு சிறந்த நடை. அக்காலத்தில் எவ்வாறு தமிழ் எழுதப்பட்டது என்பதைக் காட்டும். பின்னாளிலே கோயில் நிர்வாகம் கார்வேட்டி நகரத்தார் கைக்குச் சென்றது. P. M. A. வீட்டார் திருப்பணி செய்துள்ளார்கள்.

---

3. சமயப்பகுதி

வேலை வணங்குவது எமக்கு வேலை

(R. பஞ்சநதம் பிள்ளை, திருச்சிராப்பள்ளி)

ஆதியந்தங் கடந்த பரம்பொருளாம் இறைவன், சக்தியாயும் சிவமாயும் விளங்குகிறான். உலகத்துயிர்களும் சக்தியும் சிவமுமாய்க் காட்சியளிக்கின்றன. சக்தியின்றிச் சிவமில்லை சிவமின்றிச் சக்தியில்லை. இவ்விரண்டும் சேராவிடில் உலகில் ஒன்றும் நடைபெறாது. ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்க இயலாது. இதை, ' சிவமெனும் பொருளும் ஆதிசக்தியொடு சேரின் எத்தொழிலும் வல்லதாம்

இவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிதரி தெனுமறை இசைக்கும்" என்று ஆன்றோர் கூறியுள்ளனர். சக்தியைப் பெண்ணாகவும், சிவத்தை ஆணாகவும் சொல்லப்பெறும். அப்பர்சுவாமிகள் திருவையாற்றில் கைலாயக் காட்சியைக் கண்டபோது, உலகத்துயிர்கள், சக்தியும் சிவமுமாக—பெண்ணும் ஆணுமாகக் காட்சியளித்தன.

இம்முறையில் அறுமுகனாகிய முருகனுக்கும் இச்சா சக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என மூன்று சக்திகள் உண்டு. இச்சா சக்தியாகிய வள்ளியும், கிரியா சக்தியாகிய தெய்வயானையும் மனைவியாக உள்ளனர். ஞானசக்தியாகிய வேலைப் பெருமான் தனது திருக்காத்தில் தாங்கியுள்ளான். முருகன் தனித்திருந்தாலும் தேவிகளுடன் சேர்ந்திருந்தாலும் ஞானசக்தியாகிய வேல், அவன் காத்தை விட்டு அகலாது. இந்தவேல் சூரபத்மன் முதலிய அசுரர்களைக் கொன்றது. சூரபத்மன் மாமரமாக நின்று கடலைக் கலக்கியபோது வேல் அம்மாத்தைப் பிளந்தது. கிரௌஞ்ச கிரியினுடைய எல்லைகளை இடிக்கச் செய்தது. தேவர்கள் போற்றுந் தன்மையது. ஞானத்தின் வடிவான வேல், அஞ்ஞானத்தின் வடிவான சூரபத்மனைக் கொன்றது. இவ்வாறே ஞானவேல், இருள் வடிவான சூரபத்மனைப் போன்ற ஆணவமலத்தைப் போக்கி உயிர்களுக்கு அருள் செய்கின்றது. இதை "ஆணவமான படலங் கிழித்து" என்று குமாகுருபார் கூறுகிறார். இத்தகைய பெருமைகளையுடைய வேலை, வேலாயுதத்தை எல்லப்ப நாவலர் பின்வருமாறு போற்றுகிறார்.

"ஓகையாற்றிரை முன்னாளில் உழக்குமா வினையும் வாட்டும்
ஏகவெவ் வரையினெல்லை இடித்திடும் இமையோர் போற்றத்
தோகைமேல் உலவுங்கந்தன் சுடர்க்காத்திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தேமக்கு வேலை"

இனி உலகில் நல்வாழ்க்கை நடத்துவதற்கு வாழ்க்கை இன்பமாய் அமைவதற்கு யாவர்க்கும் ஒருதொழிலோ—வேலையோ இன்றி யமையாதது. மனிதனுக்கு வேண்டிய அவசியப்

பொருள்களாகிய உணவு உடை முதலியன உழைப்பினுல் வந்தவை. நாட்டின் வளத்தைப் பெருக்குபவை, பல் வேறுன கைத்தொழில் களாகும். நாட்டின் பழம்பெரு மையை—கலாசாரத்தை—முற்கால நாகரிகத்தை விளக்கும் படியான—கண்டவர்களை வியக்கச் செய்யும்படியான—ஓவி யம், சித்திரம், சிற்பம் முதலியவை மனிதனின் பேருழைப் பினுல் ஏற்பட்டவை. மகாபலிபுரத்துச் சிற்பங்களென்ன—தஞ்சைக்கோபுரம் மென்ன - மகேந்திரன் காலத்தில் ஏற் பட்ட குகைக்கோயில்களென்ன-இவைகள் யாவும் உழைப் பின் சின்னங்களாகக் காட்சியளிக்கின்றன. உலகக் காட்சி யைப் பார்க்கும்போது உயிர்வகைகள் ஒவ்வொன்றும் ஏதேனும் ஓர்வேலையைச் செய்து கொண்டே இருக்கின்றன. இயற்கைப் பொருள்களாகிய நிலம், நீர் முதலிய ஐம்பெரும் பூதங்களும் தம் தொழிலைச் செய்கின்றன. 'பூதம் தம் தொழில் செய்து ஏத்தும்' என்கிறுர் ஒருவர். முயற்சி யால் செல்வமும், முயலாமையாகிய சோம்பலால் வறுமை யும் உண்டாகின்றன. முயற்சியின் உருவான அருச் சுனனே கண்ணனின் அருட் செல்வத்தையும், வெற்றியை யும் பெறுகின்றுன்.

ஆகவே எல்லோருக்கும் ஓர் வேலை வேண்டப்படு கிறது. வேலை - தொழில் - உழைப்பு - முயற்சி - என்பன ஒரு பொருட் சொற்கள். உழைப்பினுல் நன்மைகள் ஏற் படுவதையும், சோம்பலால் துன்பம் உண்டாவதையும் "உழப்பின் வாரா உறுதிகள் உளவோ, கழப்பின் வாராக் கையற வுளவோ" என்று பட்டினத்தடிகள் காட்டுகிறுர். உழைப்பிற்குப் பயனுண்டு. மேலும் மனதில் உண்டாகும் துயரங்களுக்கும் கவலைகளுக்கும் வேலையே மருந்தாயுள்ளது. இதை, "Work is the grand cure for all the maladies and miseries" என்கிறுர் ஒருவர். உணவும், உறக்கமும் உடலுக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு வேலையும் அவசியமாகும். "Work is as necessary as eating and sleeping" என்கிறுர் ஒருவர்.

மனிதரிற் சிலர் இயல்பாகவே வேலை செய்யச் சக்தி யற்றவராயிருக்கின்றனர். பலர் வேலை செய்ய மனமில்லாமல் சோம்பலை மேற்கொண்டு காலத்தை வீணே கழிக்கின்றனர். தனிமனிதனுடைய சோம்பலால் சமூகத்துக்கும் தீங்கு உண்டாகிறது. செல்வம் படைத்தவனாயினும் வேலை செய்ய ஆற்றல் உள்ளபோது சோம்பியிருத்தற்கு இயற்கைச் சட்டத்தில் இடமில்லை என்கிறார் ஒருவர். மனிதன் வேலைச் சூழ்நிலையில் வாழ்கிறான். 'வேலையுலகிற் பிறந்து வேலை பொழிந்தோமில்லை' என்கிறார் ஒருவர். எருதைப் போல் உழைக்குந் தன்மை உடையவன் துன்பம் நீங்கி இன்பம் பெறுவான் என்கிறார் வள்ளுவர். ஆகவே, தெய்வத்தை வணங்குவதுபோல, வேலையையும்—தொழிலையும்—வணங்கவேண்டும். நவராத்திரி விழாவில் தொழிலைப் போற்றும் முறையில், பல பதுமைகளையும், தொழிலுக்குச் சாதனமான பிறபொருள்களையும் வைத்துப் பூசிக்கின்றனர். 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்கிறார் பாரதியார். இம்முறையில் 'வேலை வணங்குவது எமக்கு வேலை' என்பதும் பொருத்தமாகின்றது.

இனி, பிரதிப் பயன் இல்லாத வேலையுண்டு. அது, பணி, தொண்டு, சேவை எனப்படும். தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெரியோரது செயலாகும். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்கிறார் அப்பர் அடிகள். தம்பொருட்டுச் செய்வது வேலையும், பிறர் பொருட்டுச் செய்வது தொண்டுமாகும். ஆகவே, ஞானத்தின் திருவுருவாகிய முருகன் கரத்திலுள்ள வேலையும், உலகத்திற்கு உறுதுணையாகிய வேலையையும்—தொழிலையும் போற்றுவோமாக.

4. சாத்திரப் பகுதி

சிவப்பிரகாச மூலமும் உரையும்

(ஆதீனப் புலவர், பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்,
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், தருமபுரம்.)

(மலர் - 25; இதழ் - 9; பக்கம் - 366-ன் தொடர்ச்சி)

(௭௰) மாயைமா மாயை மாயர்
வரும்இரு வினையின் வாய்மை
ஆயஆ ருயிரின் மேவும்
மருள்எனில் இருளாய் நிற்கும்
மாயைமா மாயை மாயா
வரும்இரு வினையின் வாய்மை
ஆயஆ ருயிரின் மேவும்
அருள்எனில் ஒளியாய் நிற்கும்.

என்பது. மாயையும் மாமாயையும் இருவினையும் ஆன்மா நின்றபடி நிற்கும். ஆன்மாமலத்திற் பிணிப்புண்டு பசு எனப் பெயர் பெற்று நின்றவழி, ஆன்மாவின் வியாப்பிய மான மாயை முதலியனவும் திரோதானமும் மலத்திற்குக் கருவியாய்ப் பாசம் எனப் பெயர் பெற்று மலமேயாய் நிற்கும் ஆன்மா, பசு என்னும் பெயர் நீங்கி முத்தனாய் அருளோடுங் கூடிநின்றவழி, அவ்வான்மாவின் வியாப்பியமான மாயை முதலியனவும் (திரோதான சத்திபோலப்) பாசமென்னும் பெயர் நீங்கி அருளேயாய் நிற்கும் என்பதாம்.

முதல்வன் தனது வியாபகத்தின் வியாப்பியமாகிய ஆன்மாவோடு நிற்கும் முறைமையும் ஈண்டுணரக் கிடக்கின்றது. ஆன்மா தனது வியாபகத்தின் வியாப்பியமான மாயை கன்ம மாயேயங்களோடும் நிற்கும். அவ்வான்மாவொடு முதல்வனும் நிற்கும். அவனது வியாபகத்தில்

ஆன்மா வியாப்பியமாயுள்ளது. வியாபக வியாப்பியங்கட்குத் தம்முட் சம்பந்தம் உண்டு. இடமும் இடத்திலுள்ள பொருளுமாதலே அச்சம்பந்தம். வியாபகப் பொருள்கட்குத் " தண்கடல் நீருப்புப் போல் " தம்முள் வியாபக வியாப்பியமாமாறு கூறியது தானமும் தானியுமாம் முறைமை பற்றியே யல்லது பிறிதில்லை. மூலமலமும் அவ்வாறு வியாப்பியமாயினும், ஒளிமுன் இருள்போல முதல்வனுக்கு மறுதலைப் பொருளாகலின், சம்பந்தம் இல்லையாயிற்று. 'இகலிவரும் இவை உணரின் இருள் வெளியாம் தன்மை', 'விமலனுக்கு ஓர் சத்தி', 'தாரகமாம் அத்தன்தாள் நிற்றல்', 'அவை உடைமை ஆளாம் நாம் அங்கு' என்னுஞ் சிவாகம வசநங்கள், மூலமலம் போல மாயை மறுதலைப் பொருளன்று என்பதை உணர்த்தும். முதல்வனோடு ஆன்மாவுக்கு எச்சம்பந்தம் உண்டு? அச்சம்பந்தம் ஆன்மாவின் வியாப்பியமான மாயைக்கும் உண்டு. மாயேயத்தையும் ஆன்மாவோடொப்பத் திருமேனியாக வைத்தோதுதலறிக.

" நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான் "

என்று எட்டுருவங்களுள் முதலேழும் மாயேயமாதல் ஓர்க. அவ்வாறாயினும் சித்து என்னும் சாதியொருமையால் ஆன்மாவுக்கு விசேட வுரிமை உண்டு.

மேல் (௬௬), " நன்னலம் பெற நிறைந்த ஞானமே ஞானம் " எனப் பிரிநிலை ஏகாரத்தாற் குறித்த பொருளை வலியுறுத்தற்கு " மாயை......ஒளியாய் நிற்கும் " என்று இவ்வாறு எடுத்தோதியருளிய ஆசிரியர் கருத்தை உணராது ஞானவாய்மையுள் மாயை முதலியவற்றின் இயல்பைக் கூறுதற்கு இயைபு யாது என்று இடர்ப்பட்டு, மாயை முதலியவற்றை ஆருயிர்க்கு அடையாக்கி, அங்குக் கொள்ள இயைபில்லாத திரோதான சத்தியை எழுவாயாக வருவித்து, அத்திரோதானசத்தி, 'மருட்காலத்தில் இருளாய் நிற்கும், அருட்காலத்தில் ஒளியாய் நிற்கும்' என்று உரைப்பாரும்

உளர். அவ்வுரை மேலைச் செய்யுட் பொருளோடியையில் லாதது. "பாகமாம் வகையின்று திரோதான சத்தி பண்ணுதலான் மலம்எனவும் பகர்வர்", "முற்சினமருவு திரோதாயி கருணையாகி" என்று முன்னர்க் கூறிப்போந்தமையின், மீளவுங் கூறல் கூறியது கூறலாய் முடியும். மாயை முதலியவற்றை ஆருயிர்க்கு அடையாக்கிப் பயனென்று மில்லை. ஆசிரியர் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பவராதலின், உய்த்துணரவைத்து அங்ஙனம் வழுப்படக் கூறார். மேலைச் செய்யுட் பொருளொடு இயைபின்றி, வெற்றெனத் தொடுத்தலும் கூறியது கூறலுமாகிய வழுப் பட்ட அவ்வுரை பொருந்தாது. மாயை முதலியவற்றை ஆருயிர்க்கு அடையாக்காது, எழுவாய் வருவிக்கவும் வேண்டாது, ஈரிடத்தும் 'மருள்' என்றே பாடமோதி, அதனை எழுவாயாக்கி 'ஆய்' என்பதற்கு இருதலையும் வெவ்வேறு உரைசெய்து, அப்பொருள் தோன்றக் கொள்வதும், முற் கூறிய காரணங்களாற் பொருந்தாது.

இத்திருவிருத்தத்தின் தாற்பரியம், முதல்வனுக்குத் திருமேனியாகிய சைதன்னியம் முதல்வனைச் சார்ந்து அவ் வண்ணமாயவழி அவ்வுடம்பும் அவ்வாறு அருண்மயமே யாகும் என்றதாம். ஆன்மாப் பசுத்துவம் நீங்கிச் சிவத் துவம் பெற்றவழிப் பசுகரணமும் சிவகரணம் ஆயவாற் ருல், அவ்வழிப் பசுஞானத்தோடு ஒப்பப் பாசஞானமும் உப்பளத்து அடுத்த பொருள் போலச் சிவஞானமேயாம் என்பது சிவாகம நூற்றுணிபு.

இதற்கு மதுரைச் சிவப்பிரகாசருளிய உரையும் பிற் காலத்தில் எழுதப்பட்ட திருவிளங்கத்தின் உரையும் பொருந்துமாறில்லை. பாடாந்தரங்களும் ஏற்றன அல்ல. இதில், மருள் × அருள் என்பவற்றின் சொல்லுருவின் வேற்றுமைக் கேதுவாய் நின்ற மகரவொற்று இருள் × ஒளி என்ற சொற்பொருள் வேற்றுமையும் நின்று, நான்கடியான வாறறிக.

(இ) ஞானவாய்மையின் பயன்

(எக) தேசுற மருவும் ஆன்ம
தெரிசனம் ஆன்ம சுத்தி
ஆசிலா ஆன்ம லாபம்
ஆகமூன் றாகும் மூன்றும்
பாசம தகல ஞானம்
பற்றல்தான் பணியை நீத்தல்
ஏசில்நே யத்த ழுந்தல்
எனும்இவற் றடங்கும் அன்றே.

என்பது. ஞானவாய்மையின் பயன் மூன்று. அவை ஆன்ம தெரிசனம், ஆன்மசுத்தி, ஆன்மலாபம் என்பன. அம் மூன்றும் முறையே பாசம் பற்றற ஞானத்தைப் பற்றுதலி லும், தன் பணி அற இறைபணி நிற்றலிலும் ஞேயத்தில் முந்துதலிலும் அடங்கும் என்பதாம்.

சிவரூபத்தின் நிகழ்வது ஆன்மதரிசனமும், சிவதரி சனத்தின் நிகழ்வது ஆன்மசுத்தியும், சிவயோகத்தின் பின் நிகழும் சிவபோகமே ஆன்மலாபமும் ஆம். ஆன்மதரி சனம் மருவுதற்குத் தேசு (சிவரூபம்) உறல்வேண்டும் என் பார், 'தேசுறமருவும் ஆன்மதெரிசனம்' என்றார். 'உற மருவும்' என்றது, பகலவன் தோன்ற மலருந் தாமரை என்பதன்கண் இடைநிற்கும் 'தோன்ற மலரும்' என்றது போல நின்றது. அகலப்பற்றல் என்றதும் அன்னதே. உயிர்க்கு ஞேயத்தழுந்தலாகிய சிவபோகப் பெருவாழ்வு ஒன்றே உரியது. மற்றைய எல்லாம் இழிந்தனவே என் பார் 'ஏசில் ஞேயம்' என்றார். மருவுதல் இயற்கையைக் குறிக்கும். இதன் கருத்து, ஆன்மா திருஞானத்தைப் பெறுதலின் பயன் ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, ஆன்ம லாபம் என மூன்றும் என்று சுருக்கி வகுத்ததாம்.

(எஉ) தன்னறி வதனால் ஏதும்
தனக்கறி வில்லை யேனும்
தன்னறி வாக எல்லாம்
தனித்தனி பயன்அ ருந்தும்

நன்னறி வறியுந் தன்மை
தன்னாலே தனைய றிந்தால்
தன்னையும் தானே காணும்
தான்அது வாகி நின்றே.

என்பது. ஆன்மா, தனதியற்கையறிவால் எதையும் அறியு மியல்பு (சுதந்திரமாகத்) தனக்கில்லை யெனினும், தனதறி வாலறிந்தநுபவிப்பானாக எண்ணி, மனாதி வாயிலாகவரும் இன்பத்துன்ப போகவிடயங்களை யெல்லாம் ஒவ்வொன்றாக அநுபவிக்கும். தனதறிவு அறியுந்தன்மை (சிவஞானத் தால் ஆவது என்றுணர்ந்து அச்சிவஞான சத்தி) யாலே தன்னை அறிந்தால், ஆன்மாவாகிய தான் சிவஞானமாகிய அதுவேயாகி நின்று தன்னையுந் தான் அறியும் என்பதாம்.

இது பாசமகல ஞானம் பற்றலாகிய (ஆன்மாவின்) முதற்பயனை உணர்த்திற்று. திருவருளால் நால்வகை வாக்கும் கலாதி தத்துவங்களும் ஆன்மஞானத்தை விளக் கும் காரகங்களாம். ஆயினும், ஆன்மா, இவ்வறிவு திரு வருளின் தூண்டுதலால் அகக்கருவிகள் துணை செய்ய யான் அறிகின்றேன் என்றுணராது, "என்னறிவாலே யானே அறிகின்றேன்; அறிந்தநுபவிக்கின்றேன்" என்று எண்ணு கின்றான். இஃது ஆன்ம சுபாவம்.

இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் ஆகிய மூன்றும் ஒருகாலத்தில் ஒருங்கே சிறிது சிறிதாக ஆன்மா வின்கண் நிகழ்வன ஆதலின், ஆன்மா, தன்மாட்டு வந்த விடயஞானம் கருவிகளினுதவியாலாயிற்று என்றும், அக் கருவிகள் மாயாகாரியங்கள் என்றும், சடமென்றும், தன் னின் வேறுவன என்றும், தனக்கு அறிவித்தது திருவருள் என்றும், அக்கருவிகளைப் போலச் சடமுமாகாது திருவரு ளைப் போலப் பேரறிவுமாகாது நின்று அறிந்த சிற்றறிவே தான் என்றும் திருவருளையும் கருவிகளையும் தன்னையும் அவ்வருளாலே காணும். இஃது அவனருளாலே தன்னைக் காண்டலே யன்றி, அவனருளாலே அவன்றாள் வணங்க லன்று. இரண்டற்கும் வேறுபாடு பெரிது. அதனை உபதேச

வாயிலான்றிக. தானதுவாகி நிற்றல் வேறு தன்னைக் காண்டல் வேறு என்றுணராதார் அவ்விரண்டு மொன்றென்பர். தன்னைக் காண்டல் ஆன்மரூபமும் ஆன்மதரிசனமும் சிவரூபமும் ஆகும். தானதுவாதல் ஆன்மசுத்தியும் சிவதரிசனமும் சிவயோகமும் ஆகும். இப்பாட்டு, யகாரத்திற்குச் சுதந்திரஞானம் இல்லை. வகாரத்தின் உதவியாலேதான் யகாரத்திற்கு அறிவினிகழ்ச்சி யுண்டாகின்றது. அவ்வுண்மையை அறிந்த யகாரம் வகாரமாகி நின்று தன்னைக் காண்டல் 'ஆன்ம தரிசனம்' என்று முற்கூறப்பட்ட மூன்றனுள் முதலாயதை உணர்த்தியது.

"ஆன்மாவும் பிறவுயிர்களைத் த்னித்தனி முதலாய்ப் பிரித்தறியுமாறில்லை யாயினும் சிவத்தைத் தரிசிக்கும் வழித் தான் அதுவாய் நின்று தன்னை அறியுமாறுபோலப் பிறவுயிர்களையும் அச் சிவத்தின் வண்ணமாய்க் கண்டறிதல் அமைவுடைத்து...அற்றாகலின் அன்றே, "தன்னாலே தனை அறிந்தால் தன்னையும் தானே காணும் தானதுவாகி நின்றே" எனவும், "அங்கிலே காணமாகா வகையதி லறிவடங்கி மன்னிட வியாபியாய வான்பயன் தோன்றும்" எனவும் புடைநூலாசிரியர் ஓதியதூஉம், "என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன், நின்னிலை யனைத்தையுங் கண்டேன் என்னே, நின்னைக் காணு மாந்தர், தன்னையுங் காணுத் தன்மையோரே" என மும்மணிக் கோவையின் ஓதியதூஉம் பிறாண்டும் இவ்வாறே ஓதியதூஉம் என்க.

'தேசுற மருவும்' என்ற தொடக்கத்துத் திருவிருத்தம் முதலிய மூன்றும் முறையே ஞானவாய்மையின் பயன் மூன்றென்பதும், அவற்றுள் முதலதும், இரண்டாவதும் உணர்த்தி நின்றவாறுணர்க. மூன்றாவதாகிய முடிந்த பயனை 'இங்கிலே தன்னில்' என்ற தொடக்கத்துத் திருவிருத்தத்தில் 'வான்பயன் தோன்றும்' என்றுணர்த்துதல் காண்க.

(எஅ) தத்துவ மான வற்றின் தன்மைகள் உணருங் காலை
உய்த்தறிந் திடவு திப்ப தோளிவளர் ஞானம் ஆகும்

அத்தன்மை அழியும் ஆறும் அகன்றிட அதுவாய் ஆன்மச்
சுத்தமாம் சுத்த ஞானத் தோருமுதல் தோன்றும் அன்றே.

என்பது. தத்துவங்களின் இயல்புகளை ஆராயும்போழ்து, ஆராயுந்தோறும் உதயமாவது (ஞானப்)பிரகாசம் வளரா நிற்குந் திருவருளாகும். அவ்வியல்புகளை ஆராய்ந்து சுட்டி அறியும் வண்ணமும் அகன்றொழிய, அத்திருவருளே யாய் ஆன்மாச் சுத்தியடையும். அடைந்துழி, அச்சுத்த ஞானம் குணமாதலின், அதன்கண் அதனது குணியும் தனி முதலுமாகிய ஞேயம் உதயமாகும் என்பதாம்.

முன்னீரடியில் ஞானோதயமும் பின்னீரடியில் ஆநந்தோதயமும் உணர்த்தப் பெற்றன. மேற்பாட்டில் 'தான் அதுவாகி' என்றதில், 'தான்' என்ற பெயர்ப் பொருள் தத்துவமானவற்றின் தன்மைகளை யுணருங்காலை யுய்த்தறியும் ஆன்மா. 'அது' என்ற பெயர்ப் பொருள் அவ்வாறு அஃது அறிய உதிப்பதாகிய ஒளிவளர் ஞானம் தானதுவாதலை அத்தன்மை யழியுமாறும் அகன்றிட அதுவாதல் என்றும் ஆன்மசுத்தியை 'ஆன்மாச் சுத்தமாம்' என்றும் விரித்தவாறறிக. 'சுத்தஞானத் தொருமுதல் தோன்றும்' என்றது சிவோதயத்தை யுணர்த்திற்றும். ஆன்மா ஞாதா. திருவருள் ஞானம். சிவம் ஞேயம். அகலுதல் – தற்போத மிழத்தல்.

இவ்விரண்டு திருவிருத்தங்களையும் சிவஞான சித்தியாரிற் 'சூரியகாந்தக் கல்லினிடத்தே' என்ற தொடக்கத்துத் திருப்பாடலுள் வரும் பதி, பதிஞானம், ஆன்மா என்பவற்றின் தோற்றங்களோடு ஒப்புநோக்கி யுணர்தல் நன்று. 'பருவஞ்சே ருயிர்க்குத்துங்க அரன்ஞானக் கண்கொடுத் தருளினாலே சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடு'ம் மெய்ந்நிலை யுணர்த்துமாற்றால் ஆன்மசுத்தி யுணர்த்தியதித் திருவிருத்தம். யகாரம் வகாரமாகிச் சிகாரத்தைத் தரிசிக்கும் என்பது இதன் உள்ளுறை.

உறைதரும் உணர்வும் அன்றி அதன்முதல் உள்ள தேன்றிங்
கறைவதேன் என்னில் அண்ண லருள்எனும் அதுவே அன்றி

நிறையொளி முதல தன்றி நின்றிடா நிமல னாகும்
இறையவன் முதல்அவன்றன் இலங்கருள் சத்தி யாமே (எசு)

என்பது. உயிர்க்குயிராய் அறிவிற்கறிவாய் வாழும் திருஞானமும் அல்லாது அதனின் வேறாய் அதற்கொரு முதல் உண்டு என்று இச்சித்தாவத்தையில் உரைப்பது எக் காரணத்தால் என்று வினவின்(விடையிறுப்பாம்.), 'அண்ண லருள்' என்னும் ஆறன் வேற்றுமைத் தொடர்க்குப் பொருள் உடையவனாகிய அண்ணலது உடைமைப் பொருள் அருள் என்பதாகும். அதுவேயுமன்றி, பூரணப்பிரகாச மாகிய குணம் ஒருகுணியின்றி நில்லாது. அநாதியமல னாகிய அண்ணல் (சிவ பெருமான்) குணியாகிய முதல் ஆகும். அவனது நித்தியப்பிரகாசமாகிய அருள் குண மாகிய ஆற்றல் ஆகும் என்பதாம்.

சிவசூரியனின்றி ஞானப்பிரகாசம் இல்லை. ஞானத் திற்கு முதலாய்ச் சிவமுண்டு. மேல் 'உதிப்பது ஒளிவளர் ஞானம்' என்றார். அந்த ஞானமே தலையானது. அதன் மேலும் ஒன்றுளதோ? என்ற வினாவிற்கு விடையிறுக்கும் ஆசிரியர், 'அண்ணலருள்' ('சிவனருள்' 'இறையருள்' 'அவனருள்') என்று வழங்கப் பெறுந் தொடர்க்குப் பொருள் கொள்ளுமாற்றில் வைத்து விளக்கி, உடையானும் உடைமையும் ஆதலை உணர்த்தியவாறு காண்க. அண்ணலரு ளென்பதில், அண்ணல் முதல் (குணி), அருள் உடைமை (குணம்) என்னும் இரண்டிருத்தலை யுணர்த்தி, குணம் குணியை யின்றித் தனித்து நில்லாமையைக் கூறி, "அருளது சத்தியாகும் அரன்றனக் கருளை யின்றித் தெருள்சிவ மில்லை அந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை" என் னும் உண்மையைத் தெளித்தவாறறிக. முதலது தோற் றம் – சிவதரிசனம். ஞானதரிசனமாகிய சிவரூபம் முற் கூறப்பட்டது.

ஒளியும் அவ்வொளியுடையதும் (கதிரவன்) முறையே குணமும் குணியும் ஆதலைக் குறித்து அவ்விரண் டும் போன்றன சத்தியும் சிவமும் என்றார். நிமலனாகு

யிறையவன் முதல் அநாதி மலாகித சிவபெருமான் (குணி) உடையவன். இலங்கருள் சத்தி - பிரகாசரூப சிவஞானம், (குணம்) உடைமை. ‘ அவன்றன் அருள் ’ என்றது ‘ அண்ணலருள் ’ என்ற தொடர்க்குப் பொருள் கொள்ளுமாற்றைக் குறித்து நின்றது. கதிர் - குணம், கதிரவன் - குணி. கதிரவனின்றிக் கதிர்த் தோற்றமில்லாதது போலச் சிவனின்றி ஞானோதயமில்லை. ஆதலின் முதல் உண்டு.

(எரு)சுத்தமாம் சத்தி ஞானச் சுடராகும் சிவம்ஒ ழிந்தச்
சத்திதான் இன்றும் முன்னைத் தகவிலா மலங்கள் வாட்டி
அத்தனை அருளும் எங்கும் அடைந்திடும் இருள்அ கற்றி
வைத்திடும் இரவி காட்டும் வளரொளி போல்ம கிழ்ந்தே.

என்பது. மேல், ‘ சுத்தஞானம் ’ (எச) எனப்பட்ட சத்திஞானப் பிரகாசம் ஆகும். சிவமாகிய சூரியனை யொழிந்து அந்த ஞானப்பிரகாசம் இல்லை. எங்கும் பொருந்திடும் இருளைப் போக்கிக் கதிரவனைக் காட்டும் பெருகிய கதிர்போல, ஆன்மாக்களை அநாதியே பற்றியே தகுதியில்லாத ஆணவ முதலிய மலங்களை வாட்டிச் சிவஞானப் பிரகாசம் சிவமாகிய சூரியனை மகிழ்ந்துணர்த்தியருளும் என்றதாம்.

மேல் (எச) ஒளியுடையதை (கதிரவனை) யின்றி நில்லாது என்ற உவமையை இதில் இனிது விளக்கியருளினர்.

கதிரானது உலகெங்கும் அடைந்திடும் புறத்திருளைப் போக்கித் தனது முதலான கதிரவனைக் காட்டும். அது போன்று, சிவஞானமானது உயிர்தோறும் அடைந்திடும் அகத்திருளை வாட்டித் தனது முதலான சிவனையுணர்த்தும். மும்மலங்களும் உயிர்களைப் பற்றுந் தகவுள்ளன. இறைவனைப் பற்றுந் தகவில்லன. அதனால், அம்மலங்களுக்குத் தகவிலாமை அடையாயிற்று. கதிரோனது கதிர் புறத்திருளொன்றனைப் போக்குமாற்றலுடையது. சிவனது ஞானச்சுடர் அகத்திருளையும் அதன் விளைவையும் வாட்டும் வன்மை மிக்கது. அதனால், ‘இருள்’ என ஒருமையாயும்

'மலங்கள்' எனப் பன்மையாயும் கூறப்பட்டன. புறத்திருள் கதிரொளி மறைய, மீண்டும் அடைதலின் 'அகற்றி' என்றும், மலங்கள் அவ்வாறு மீண்டும் தாக்காதவாறு சிவ ஞானப்பிரகாசம் மகிழ்ந்து தீர்த்தலின் 'வாட்டி' என்றும், கதிர்க்கு இருளை அகற்றுவதில் விருப்போ வெறுப்போ இல்லை. சிவஞானப்பிரகாசத்திற்கு மலங்களை வாட்டுவதிலும் ஆன்மாக்களை ஆட்கொள்வதிலும் தாகமும் வேகமும் மோகமும் உண்மையால், 'மகிழ்ந்து' என்றார். "பால் நினைந்தூட்டுந் தாயினுஞ் சாலப்பரிந்து...ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆநந்தமாய தேனினைச் சொரிந்து புறம்புறம் திரி"தல் மகிழ்ச்சியாலன்றோ? தாயின் இரக்கத்தை யுணர்த்தற் பொருட்டே (அத்தனை) 'அருளும்' என்றதாகும். கதிரவனது 'வளரொளி' வளர்வதும் தளர்வதும் உடையது. சிவப்பிரகாசம் என்றும் ஒரு தன்மையாய் உள்ளது என்பார் "ஞானச்சுடர்" என்றுணர்த்தியருளினர்.

அச் சத்தியாகிய ஞானச்சுடர் மலங்களை வாட்டி மகிழ்ந்து அத்தனை அருளும் என்றதால், மலவெற்றியைக் குறித்த மகிழ்வென்று கூறலும் பொருந்தும் எனினும் சிவ ஞானத்தியல்பிற்கு அத்தகு மகிழ்ச்சி ஒல்லாது; தோல்விக்கு வருத்தம் உறலும் நேருமெனப்படுதலின், அம் மகிழ்ச்சியும் வருத்தமும் ஜீவசுபாவமும் ஆமன்றிச் சிவ சுபாவமாகா என்க. (தொடரும்)

---

5. கலைப்பகுதி

திருக்கற்குடி யிறைவன் திருப்பெயர்

(வித்துவான் - ஆ. சிவலிங்கனார், மயிலம்)

மூத்தவனை வானவர்க்கும் மூவா மேனி
முதலவனைத் திருவரையின் மூர்க்கப் பாம்பொன்ற
ஆர்த்தவனை அக்காவம் ஆர மாக
அணிந்தவனைப் பணிந்தடியார் அடைந்த அன்போடு

எத்தவனை யிருவரையில் தேனை வனோர்க்
　　கின்னமுதம் அளித்தவனை யிடரை யெல்லாம்
காத்தவனைக் கற்குடியில் விழுமி யானைக்
　　கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

அப்பாடிகளின் இத் தேவாரப் பாட்டைப் பாடிய காலத்தில் ஈற்றடி என் மனத்தை யீர்த்தது. "கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே" என்றதில் 'கற்பகத்தை' என்ற சொல் தடித்த எழுத்தில் காணப்பட்டது சமாசப் பதிப்பு அப்பர் தேவாரத்தில். உடனே அதுபற்றிப் பார்க்கையில் கற்குடியிறைவன் திருப் பெயர் கற்பகநாதர் எனத் தெரியவந்தது. "கற்குடியில் கற்பகத்தை" எனச் சேர்த்து அப்பரடிகள் கூறியிருப்பின் மன அமைதி கொள்ள நேரும். ஆனால், "கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தை" என இடையில் 'விழுமியானை' என்பது இருப்பது காரணமாக மனம் அமைதியுறவில்லை. விழுமியான் என்பதற்கு, 'சிறந்தவன்,' 'மேம்பட்டவன்' எனப் பொருள் உண்டு. 'மேம்பட்டவன்' என்றதற் கேற்ற வடசொல் 'பரமன்' என்பதாகும். "எனவே 'கற்குடிப் பரமன்' என்று பொருள் படும்படி 'கற்குடி யில் விழுமியான்' என நாவுக்கரசர் நவின்றனர் போலும்" என்றும் எண்ணினேம். பின்னர் சம்பந்தர், சுந்தரர் தேவாரங்களைக் காண்போம் என்று அவர்கள் கற்குடி யிறைவனைப் பாடிய பதிகங்களைப் பார்த்தேம். சம்பந்தர் பதிகத்தில் 'விழுமியான்,' 'கற்பகம்' என்றசொற்களையே காணவில்லை. சுந்தரர் பதிகத்தில் இரண்டு பாக்களில் கற் பகம் என்ற சொல் வந்துளது.

நிலனே நீர்வளிதீ நெடுவானக மாகிநின்ற
புலனே புண்டரிகத் தயன்மாலவன் போற்றிசெய்யும்
கனலே கற்பகமே திருக்கற்குடி மன்னிநின்ற
அனல்சேர் கையினனே யடியேனையும் அஞ்சலென்னே.

அலையார் தண்புனல்சூழ்ந் தழகாகி விழவமரும்
கலையார் மாதவர்சேர் திருக்கற்குடிக் கற்பகத்தைச்

சிலையார் வாணுதலாள் நல்லசிங்கடி யப்பனுரை
விலையார் மாலைவல்லார் வியன்மூவுல காள்பவரே.

சுந்தரர் மேற்பாடல்களில் 'கற்பகம்' என்றும் 'திருக்கற்குடிக் கற்பகம்' என்றும் கூறியிருப்பதுகொண்டு கற்குடி யிறைவன் பெயர் 'கற்பகநாதர்' என்பதுவே போலும் என்றும் எண்ணினேம்.

இந் நிலையில் சேக்கிழாரின் நினைவு வரவே அவர், மூவர் வரலாறுகளையும் கூறுமிடங்களில், அவரவர்களும் சென்று வணங்கிய இடங்களை, சிலவற்றிற்குச் சிறப்பு நிகழ்ச்சிகள், வளங்கள் முதலியனவற்றைக் கொண்ட அடைகளையும் கூறிச் செல்பவராதலின் அவரது பெரிய புராணத்தைக் கண்டு தெளியலாம் என எண்ணிப் பார்த்தேம். சுந்தரர் வரலாற்றில், அவர் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு வருபவர் கற்குடிவந்தும் இறைவனைப் பாடி வணங்கிச் சென்றார் என்னும் இடத்தில் சேக்கிழார்,

"வீடு தருமிக் கற்குடியில் விழுமியாரைப் பணிந்திறைஞ்சி
நீடு விருப்பில் திருப்பதிகம் நிறைந்த சிந்தை யுடன்பாடி"

எனக் கூறினர். சேக்கிழார் "கற்குடியில் விழுமியார்" எனச் சேர்த்திருப்பது கொண்டும் அப்பரின் அருள் மொழியில் "கற்குடியில் விழுமியானை" என வந்தது கொண்டும் கற்குடியிறைவன் பெயர் 'விழுமியான்' என்பதாகலாமோ என மீண்டும் ஐயுற்றேம்.

ஐயுற்றே தருமபுர வெளியீடு அறிவுரைப் பூம்பொழிலில் புகுந்தேம். புகும் வழியில்,

"பொழிலிற் புகுந்தால் வெப்பம் தோன்றுவதில்லை. நறுமணம் வீசுகிறது......சுருங்கச் சொன்னால் மனிதன் கண்டு கேட்டு உண்டு உற்று அடையும் எல்லா இன்பங்களையும் பொழிலிற் புகுந்து அடைகின்றான் என்னலாம். இந்த அறிவுரைப் பூம்பொழிலிலும் அப்படித்தானே யடைய வேண்டும்!"

என்று எழுதிய பலகையொன்று காணப்பட்டது. ஆம்! இப் பொழிலில் இன்பம் எய்தலாம் என்றே நுழைந்து கண்டுகொண்டே சென்றேம். சென்ற எமக்குத் தேடிய பொருள் கிடைத்தது. அளவற்ற மகிழ்ச்சி கொண்டேம். இதோ அப்பொருள் :

"திருச்சிராப்பள்ளிக் கருகில் உய்யக்கொண்டான் திருமலை என்ற திருத்தலமும், சிறுகுன்றின்மேல் சிவாலயமும் இருக்கின்றன. அது பாடல் பெற்ற தலம். திருக்கற்குடி என்று தேவாரத்திற் பெயர்கொண்டது. அவ்வூரைப் பல்லவன் நந்திவர்மன் பிரமதேயமாகத் தானம் தந்ததினால் அது நந்திவர்ம மங்கலம் என்று பெயர் பெற்றிருந்தது. அப் பல்லவனுக்கு வயிரமேகன் என்ற பட்டம் இருந்தது. அடுத்து அவன் வெட்டின வாய்க்காலுக்கு வயிரமேகன் வாய்க்கால் என்ற பெயரும் ஏற்பட்டது. பண்டைக் காலத்தில் இருந்த மூர்த்திக்குத் திருக்கற்குடி ஆழ்வார் விழுமியார் என்ற பெயர் இருந்ததாகவும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. பின்னாலே அம் மூர்த்தியின் பெயர் உய்யக்கொண்ட நாயகன் என்று மாற்றப்பட்டது. அது உய்யக்கொண்ட சோழனால் மாற்றப்பட்டது என்று அறியலாம். மலையின் பெயரும் உய்யக்கொண்டான் திருமலை என்றும், வாய்க்காலின் பெயரும் உய்யக்கொண்டான் ஆறு என்றும் மாறிவிட்டன. இந்த ஆலயத்திற்குச் செம்பியன் மாதேவியார் பல அருமையான திருப்பணிகள் செய்தார். அவர் செய்த காலத்தில் சுவாமியின் பெயர் பரமேசுவரன் என்றும் விழுமியார் என்றுமே யிருந்தன."

இது அறிவுரைப் பூம்பொழிலில், செம்பியன் மாதேவியார் என்ற தலைப்பில் கோவைகிழாரால் எழுதப்பட்ட கட்டுரையில் உள்ளது. இதனகத்துக் கற்குடியிறைவன் பெயர் விழுமியார் என்று கண்டிருத்தல் காணலாம். விழுமியார் என்றதன் வடமொழிப் பெயர் பரமேசுவரன் என்பதாகும்.

அப்பாடிகள் காலம் கி. பி. 7-ம் நூற்றாண்டின் தொடக்கம். செம்பியன்மாதேவியார் காலம் கி. பி. 10-ம் நூற்றாண்டின் இடைக்காலம் (949—95). சேக்கிழார் காலம் கி. பி. 12-ம் நூற்றாண்டின் இடைப்பகுதி. எனவே கி. பி. 12-ம் நூற்றாண்டு வரையிலும் கற்குடி யிறைவர்க்கு விழுமியார் என்ற பெயர் இருந்திருக்கின்றதென நாம் உணரலாம். 'கற்பகம்' என்ற பெயர் எவ்வாறு வந்ததோ தெரியவில்லை. அப்பாடிகள் வாக்கில் வந்தது கொண்டு அப்பெயர் (கற்பகம்) நிலைத்துப் பின்னர் சுந்தரரும், அப்பாடிகள் வாக்கைக் கொண்டும், மக்கள் வழக்கத்தைக் கொண்டும் கற்குடிக் கற்பகம் என்றார் போலும்! எனினும் விழுமியார் என்ற பெயர் நிலைத்திருக்கின்றது. கல்வெட்டாராய்ச்சியில் மிக வல்லுநரான சேக்கிழார் விழுமியார்என்ற சொல்லை மேற்கொண்டது அவரது கல்வெட் டாராய்ச்சியின் நுண்மாண் நுழைபுலத்தையன்றோ வெளிப்படுத்துகின்றது. அப்பாடிகள் வாக்கும் அன்றோ அவர்க்குத் துணை புரிந்தது!

இதுவரை கூறியவற்றிலிருந்து கற்குடி யிறைவனுக்கு விழுமியான், கற்பகம், உய்யக்கொண்ட நாயகன் ஆகிய பெயர்கள் உண்டென்றும், 12-ம் நூற்றாண்டுவரை விழுமியான் என்ற பெயரே நிலைத்திருந்ததென்றும் மற்றைப் பெயர்கள் பிற்காலத்தியன என்றும் விழுமியான் என்ற தமிழ்ச் சொல்லின் மொழிபெயர்ப்பு பரமேசுவரன் என்பது என்றும் அறியலாம்.

அடுத்து விழுமியான் என்ற சொல் கடவுளுக்கு வந்த வாற்றை ஆராய்வோம்.

(தொடரும்)

தேவாரப் பண்கள்

(திரு. S. பொன்றேதுவார்)

பண்ணைவிட்டு இசை நில்லாது; இசையை விட்டுப் பண்ணில்லாது. ஆதலின் பண்ணும் இசையுமாகிய விரண்டும் பூவும் அதன் மணமும் போலவும், நீரும் அதன் றன்மையும் போலவும் அத்துவிதமாக நிற்கும். இதனை:—

" பண் ணென்ற விசைபாடு மடியார்கள். "

(ஞானசம் - பண் சீகாமரம்)

" பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும் "

(ஞா—நட்டபாடை)

" பண்ணி லோசை பழத்தினி லின்சுவை "

(வாகீசர்—பண் ஒந். குறுந்தொகை)

" பண்பொருந்த விசைபாடும் பழனஞ் சேரம்பனை "

(வாகீ—பழந்தக்கராகம்)

" பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி "

(வாகீசர்—திருந்தாண்டகம்)

" பண்ணையும் ஓசையும் போல் "

(சிவஞான போதம் 2. சூ. க அதிகரணம்)

" பண்ணிசை வெம்பரிதி மதி "

(சிவஞான சித்தியார்)

என்பனவற்றாலும் அறிக. அன்றியும் உமாபதி சிவாச்சாரியரும் திருமுறை கண்ட புராணத்துப் பண்ணு மிசையும் அத்துவிதமெனக் கொண்டிருத்தலை :—

" இன்னிசை யாழ்ற்றருந் தக்கராகத்து "

" இசைக்காந்தார பஞ்சமத்தின் "

"புல்லுமிசைப் புறநீர்மைக்கு"
"ஈண்டிசை சேரிந்தளத்துக்கு"
"இன்னிசை தேர்தக்கேசிப் பேரிசை யாருக்கி"
"கூறுமிசை யொன்றாகக் காமரத்துக்கு"
"உற்றவிசைக் குறிஞ்சிக்கு"
"கவுசிகப் பாற்றுற்ற விசையிரண் டாக்கித் தூயவிசைப்
பஞ்சமத்துக் கற்றவிசை யொன்றாக்கி"

எனவரும் இப்பாசுரங்களின் பிரிவுகளாலுங் காண்க.

இன்னும் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில், "வங்கியத்தின் வழ்துளையில்" சரிகமபதநி யென்னுமே ழெழுத்தையும் மாத்திரைப் படுத்தித் தொழில் செய்ய இவற்றுள்ளே ஏழிசையும் பிறக்கும். இவை பிறந்து இவற்றுள்ளே பண்கள் பிறக்கும். என்னை, "சரிக மபதநி யென் றேழெழுத்தாற் றானம், வரிபாந்த கண்ணியனாய் வைத்துத்—தெரிவரிய, ஏழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்குஞ், சூழ்முதலாஞ் சுத்தத் துணை" என்றாராகலின் மூலாதாரந் தொடங்கி எழுத்தினுதம் ஆளத்தியாய்ப் பின் இசையென்றும் பண்ணென்றும் பெயராம். என்னை ?

"பாவே டணைத விசையென்றார் பண்ணென்றார்
மேவா பெருந்தான மெட்டாலும்—பாவா
யெடுத்தன் முதலா விருநான்கும் பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்று பார்."

பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் இசையென்று பெயராம். பெருந்தானம் எட்டினும் கிரியைகளெட்டாலும் பண்ணிப்படுத்தலாற் பண்ணென்று பெயராயிற்று.

பெருந்தான மெட்டாவன : நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணுக்கு, உதடு, பல், தலை யெனவிவை.

கிரியைகளெட்டாவன: எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு எனவிவை.

என்றடியார்க்கு நல்லார் எழுதிய உரைப்பகுதியாலும் பண்ணுமிசையு மத்துவிதமென விளங்குமா றறிக.

பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலா லிசையா மென்பதனை.

" புறம்பயத் திறைவரை வணங்கிப் போற்றிசெய்
திறம்புரி நீர்மையிற் பதிகச் செந்தமிழ்
நிறம்பயி லிசையுடன் பாடிநீடிய
அறந்தரு கொள்கையா ரமர்ந்து மேவினர் "

" நிறம் பயிலிசை " எனச் சேக்கிழார் நாயனர் பெரிய புராணம், திருஞான சம்பந்தர் புராணம் 241-ம் பாடலிற் கூறி வாற்ருனுமறிக.

தேவாரத்தில் வந்துள்ள பண்கள்–21. தேவாரப் பண்கள் இருபத்து நான்கென்றும், இருபத்தே ழென்றும், இருபத்தெட்டென்றுஞ் சிலர் கொள்கின்றனர். அங்ஙனங் கோடல் பொருந்தா தென்பதனைக் கீழ் வருமாற்ரு லுணர்க.

திருக்கழுமலம்—திருத்தாளச்சதி

பண் - வியாழக் குறிஞ்சி

பந்தத்தால் என்னும் திருப்பதிகக் கடைக்காப்பு

" கஞ்சத்தே னுண்டிட்டே களித்துவண்டு சண்பகக்
கானேதேனே போராருங் கழுமல நகரிறையைத்
தஞ்சைச்சார் சண்பைக்கோன் சமைத்த நற்கலைத்துறை
தாமேபோல்வார் தேனேரார் தமிழ்விரகன மொழிகள்
எஞ்செத்தேய் வின்றிக்கே இமைத்திசைத்த மைத்தகொண்
டேழேயேழே நாலேமுன் றியலிசை இசையியல்பா
வஞ்சத்தேய் வின்றிக்கே மணங்கொளப் பயிற்றுவோர்
மார்பேசேர்வாள் வானோர்சேர் மதிநுதல் மடவாலே."

என்னும் திருக்கடைக் காப்பில் " ஏழே யேழே நாலே

மூன்றியலிசை" எனத் திருஞான சம்பந்த மூர்த்திநாயனாரே பண்களிருபத் தொன்றென்று வரையறை செய்தருளியிருத் தலாலும், இதற்கேற்ப தொன்று தொட்டுத் திருவாவடு துறை யாதீனத்தும் இருபத்தொரு பண்களென்றே கொண்டு நாளதுவரை யோதப்பட்டு வருமாட்சியனுபவ முண்மையானும் பண்களிருபத் தொன்றென்று கோடலே பொருத்தமாம். ஆயின், திருஞான சம்பந்தரும், திருநாவுக் காசருஞ் செய்தருளிய திருப்பதிகங்களில் செந்துருத்திப் பண் பதிகமில்லாதிருக்க அவ்விருவருக்குப் பின் வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளே அப்பண்ணமைந்த "மீளா வடிமை" என்னும் திருப்பதிகஞ் செய்தருளினாராக லான், சுந்தரர்க்கு முன்னிருந்த திருஞானசம்பந்தர் அச் செந்துருத்திப் பண்ணையும் சேர்த்து "ஏழேயேழே நாலே மூன்று" என்றெங்ஙன மிருபத் தொன்றாக வரையறுத்தா ரெனில், அத்திருஞானசம்பந்தர் தாமோ, திருநாவுக்காசர் தாமோ செந்துருத்திப் பண் பதிகம் செய்திருத்தல் வேண் டும்; அப்பதிகம் இறந்துபோன பதிகங்களோடு சேர்ந் திருக்கலா மென்று ஊகிக்கத் தக்கதாகின்றது.

அன்றியும் "ஈரிருபண்ணு மெழுமூன்று திறனுமா கின்றனவிவை" என்றாராகலிற் பாலை - குறிஞ்சி - மருதம்- செவ்வழி யென்னும் நாற்பண்ணும் இருபத் தொன்று கின்றன வென்னு மிசையிலக்கணத்தை யனுசரித்து அங் ஙன மிருபத் தொன்றெனத் தொகை கொண்டருளினாரென் றலுமாம்.

பண்ணும் இராகமும் அத்துவிதமா யிருத்தலினாலேயே ஆதியிலிருந்த ஆன்றோர்கள் ஒவ்வொரு பண்ணுக்குமுள்ள இராகங்களைக் கண்டே ஓதிவந்திருக்கிறார்கள். திருவாவடு துறை யாதீன ஏட்டுப் பிரதிகளில் "கொல்லம் 917 துன் முகி, மாசிமாதம் 4௳ எழுதிமுடிந்தது" என்று இறுதியி லெழுதியிருக்கும் ஒரு சித்தாந்த சாஸ்திர ஏட்டினேரிடத் திலே கண்டவை வருமாறு:—

	பண்	இராகம்
1	புறநீர்மை	ஸ்ரீகண்டி
2	காந்தாரம்	
	பியந்தைக் காந்தாரம்	இச்சிச்சி
3	கௌசிகம்	பயிரவி
4	இந்தளம், திருக்குருந் தொகை	நௌித பஞ்சமி
5	தக்கேசி	காம்போதி
6	நட்டராகம் சாதாரி	பந்துவாராளி
7	நட்டபாடை	நாட்டைக் குறிஞ்சி
8	பழம் பஞ்சுரம்	சங்கராபாணம்
9	காந்தாரபஞ்சமம்	கேதார கௌளை
10	பஞ்சமம்	ஆகிரி

இப்பத்தும் பகற்பண்களாம். பகல் மூன்று நாழிகையிலிருந்து மும்மூன்று நாழிகையாக ஒவ்வொரு பண்ணுக்கும் முறையே மேலேற்றிக் கால வரையறை கொள்க.

11	தக்காரகம்	கன்னட காம்போதி
12	பழந்தக்காரகம்	சுத்த ச்சாவேரி
13	சீகாமரம்	நாதநாமக்கிரியை
14	கொல்லி, கொல்லிக் கௌவாணம், நேரிசை திருவிருத்தம்	காந்துக்காநடா
15	வியாழக் குறிஞ்சி	சௌராஷ்டிரம்
16	மேகராகக் குறிஞ்சி	நீலாம்பரி
17	குறிஞ்சி	பிலகரி
18	அந்தாளிக் குறிஞ்சி	சைலதே காட்சி

இவ்வெட்டும் இராப் பண்களாம். இராமூன்றே முக்கால் நாழிகையிலிருந்து மூன்றே முக்கால் நாழிகையாக முறையே ஒவ்வொரு பண்ணுக்கும் மேலேற்றிக் காலவரையறை செய்க.

19	செவ்வழி	எதுகுல காம்போதி	இரவு
20	செந்துருத்தி	மத்யமாவதி	பகலும் இரவும்
21	திருத்தாண்டகம்	பியாகடை	இரவு

இம்மூன்றும் பொதுப்பண்களாம். பகலிரவு எக்காலமும் பொதுவாக வுரியன வாகையாற் பொதுப் பண்களாயின.

இராக சுரங்கள்

ஸ்ரீகண்டி - சகமபதநிச - சநிதபமகச ஸிந்துகன்னடா. மகமரி
தமபச - சநிசபமகரி
ச-ரி. அம் - க - ச - த - கை - நி
சைலதேசாட்சி. சரிகம பம தநிச.
சநிபம கமரிஸ
ஷ-ரி-அம்-கா. ஸ-த-கா-நி.

இவையே முன் சொன்ன எட்டினோரிடத்திற் கண்டவை. பிங்கல நிகண்டு முதலிய சில நூல்களிற் கண்ட சில பண்களின் :

பரியாய நாமங்கள்

புறநீர்மைக்கு நேர்திற மென்பதும், காந்தாரத்திற்கு வடுகென்பதும், தக்கேசிக்கு நவிரென்பதும், சாதாரிக்கு முல்லை யென்பதும், நட்டபாடைக்கு நௌவள மென்பதும், பழம்பஞ்சரத்துக்குப் பஞ்சுரம்—செருந்து யென்பவும, காந்தார பஞ்சமத்திறகு உறழ்ப்பு நாட்டம் எனவும், பஞ்சமத்துக்கு அயிர்ப்பென்பதும், கொல்லிக் கௌவானத்துக்குப் பாலையாழென்பதும், குறிஞ்சிக்கு அராற்றென்பதும், செந்துருத்திக்கு செந்திறமென்பதும் பரியாய நாமங்களாகப் பிங்கல நிகண்டு முதலிய சில நூல்களிற் காணப் படுகின்றன.

காந்தார பஞ்சமத்துக் கன்றித் திருநேரிசைக்கும் நாடாம் என்னும் பெயர் காணப்படுகிறது.

திருவாய் மொழியில் வியந்தம்—பாலையாழ், நாட்டம், செருந்தி, முதிர்ந்த குறிஞ்சி, கைசிகம் முதலாகச் சில பண்களுள்ளன.

திருக்குறுந் தொகை-ஈரடி, திருவிராகம், திருமுக்கால், யாழ்மூறி, திருத்தாளச் சதியாகச் சொல்லப்படுவனவெல்

லாம் பண்ணால் வந்த பெயர்கள் அல்லனவாம். பா விகற்பங்களாலும் பிற காரணங்களாலும் வந்த பெயர்களாம்.

செவ்வழிப் பண்ணமைந்த திருப்பதிகங்கள் திருஞானசம்பந்த நாயனாரொருவரோ யருளிய அம்மட்டிலுள்ளன. செந்துருத்திப் பண்ணமைந்த "மீளாவடிமை" என்னும் திருவாரூர் திருப்பதிகமொன்றே. திருத்தாண்டகம், திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகையாகிய இவையமைந்த பதிகங்கள் திருநாவுக்கரசு நாயனாரொருவ ராலேயே யருளி அம்மட்டிலுள்ளன.

யாழ்மூரிப்பதிகமாகிய "மாதர்மடப் பிடியும்" என்பது மேகராகக் குறிஞ்சியிலும், திருத்தாளச் சதிப்பதிகமாகிய "பந்தத்தால்" என்பது வியாழக் குறிஞ்சியிலும் அடங்கும். திருவிராக மென்பது இந்தளம் சாதாரி கட்டபாடை என்னு மிவையமைந்த திருப்பதிகங்களிலே சிலமுழு கிசையாயுள்ளனவற்றிற்குப் பெயராகி வருகின்றது. அஃது ஓர் பண்ணன்று. இராகம் என்பது அராகம் எனவும் வரும்.

"அராகம் செந்கிறமே, பாலையாழ் முடுகிசைப்பாட்டாசை" என்பது நிகண்டாகலின் இராகம் என்பது முடுகிசையாம்.

பண்களோதுதற்குரிய காலவரையறை இசை நூல்களில் சொல்லப்பட்டுள்ளனவே வென்னில்; திருவாடுதுறை திருத்தருமபுர ஆதீனங்களில் ஓதுவா மூர்த்திகள் ஓதிவந்த ஆட்சியே காலவரையறை கோடற்குக் காரணமென்பதும், அவ்வாட்சி பற்றியே இறந்துபோன இசை நூல்களில் காலவரையறை சொல்லப்பட்டிருத்தல் வேண்டும் என்பதும் கொள்ளக்கிடக்கும். இது பின் வருமாற்றால் விளங்கும்:

"பாடல் பயிலும் பனிமொழி தன்பணைத்தோள்
கூடலவா வற்குறிப்புணர்த்தும்—ஆடவற்கு
மென்றீங் தொடையாழின் மெல்லவே தைவந்தான்
இன்றீங் குறிஞ்சி இசை"

என்று நட்டவணிக்கு மேற்கோளாகத் தண்டியலங் காரத்திலே எடுத்துக் காட்டப்பட்ட இச்செய்யுள் பழைய வுரையுள் :

இங்கே குறிஞ்சியைப் பாடுதலாகிய தொழிலினலே இடையாமத்திற் கூடுதற்கு நேர்ந்தாளென்பது அனுமானித் தறியப்படும். குறிஞ்சிக்குச் சிறு பொழுது இடையாமென வறிக எனக் குறிஞ்சிப் பண்ணுக்கும் காலவரையறை இடையாமெனக் காணப்படுதற் கேற்ற முன் சொன்ன ஆதீன கர்த்தர்களாகிய மடாதிபதிகள் மார்கழி மாதத்தி லிடையாமத் தெழுந்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு பூசாமடஞ் சென்று பூசிக்கும் அபிபூசாலயங் களிலேதான் குறிஞ்சிப் பண்ணோதுவதை ஓதுவாமூர்த்தி கள் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். பிற்காலத்திலோது வதில்லை.

பெரிய புராணம் ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம்.

" அன்றுதிரு நோக்கொன்று லாரக்கண் டின்புறார்
நின்றுநில மிசைவீழ்ந்து நெடிதுயிர்த்து நேரிறைஞ்சி
வன்றொண்டர் திருவாரூர் மயங்குமாலையிற் புகுந்து
துன்றுசடைத் தூவாயா தமைமுன்னந் தொழவணைந்தார்."

" பொங்குதிருத் தொண்டருடன் உள்ளணைந்து புக்கி
துங்கவிசை திருப்பதிகந் தூவாயா வென்றெறைஞ்சி
இங்கெமது துயர்களைந்து கண்காணக் காட்டாயென் றெடுத்தே
அங்கணர்த முன்னின்று பாடியருந் தமிழ்புனைந்தார்."

" ஆறணியுஞ் சடையாரைத் தொழுதுபுறம் போந்தங்கண்
வேறிருந்து திருத்தொண்டர் விரவுவா ருடன்கூடி
ஏறுயர்த்தார் திருமூலட் டானத்துள் இடைதெரிந்து
மாறில்திரு அத்தயாமத் திறைஞ்ச வந்தணைந்தார்."

" ஆதிதிருவன்ப ரெதிர் அணைய வவர்முக நோக்கிக்
கோதில் இசையாற் குருகுபாய வெனக் கோத்தெடுத்தே
ஏதிலார்போல் வினவி ஏசறவால் திருப்பதிகம்
காதல்புரி கைக்கிளையாற் பாடியே கலந்தணைவார்."

இந்நான்கு பாக்களில் வன்றொண்டர் திருவாரூர் மயங்குமாலையிற் புகுந்து "தூங்கலிசைத் திருப்பதிகம் தூவாயவென வெடுத்தே" என்பவற்றாலும், "அத்த யாமத் திறைஞ்ச வந்து "குருகு பாயவெனக் கோத்தெடுத்தே" என்பவற்றாலும், முறையே பகல் 27 நாழிகை தொடங்கி 30-நாழிகை வரையுமாகிய மாலைக் காலத்திற்குரிய பஞ்சமம் பண்ணமைந்த திருப்பதிகமும், இரவு $11\frac{1}{4}$ நாழிகை தொடங்கி 15 நாழிகைவரையுமாகிய அர்த்தயாம காலத்திற்குரிய கொல்லிப்பண்ணமைந்த திருப்பதிகமுமாகின்றன. ஆகையால் தேவாரம் திருவாய் மலர்ந்தருளிய சமயாசாரியர்கள் தாம் ஒவ்வொரு தலத்துக்குஞ் சென்றருளிய காலம் எக்காலமோ அக்காலத்துக்குரிய பண்களையே பெரும்பாலும் அமைத்துப் பாடினார்களென்பது பெறப்படுகின்றது. ஆகவே, பஞ்சமம், கொல்லி ஆகிய இவ்விரண்டு பண்களும் காலநியமந் தவறாமலே இந்நாள் வரையும் ஓதுவா மூர்த்திகளால் ஆதீனங்களில் ஓதப்பட்டு வருகின்றன. ஓதுவா மூர்த்திகள் ஓதிவரும் பண்களில் குறிஞ்சி, பஞ்சமம், கொல்லி என்றும், இம்மூவகைப் பண்களுக் கேற்பட்ட காலவரையறை மேற்காட்டியவற்றிற்கு ஒத்திருத்தலால் அவர்கள் ஏனைய பண்களுக்குக் கொண்டிருக்கும் காலவரையறையும் முன்னிருந்த இசை நூல்களுக்கு ஒத்ததென்றே கொள்ளத் தக்கது.

தேவ ராகங்கள்—32

1	பைரவி	11	பல்லவி
2	தேவக்கிரியை	12	சாவேரி
3	மேகராஞ்சி	13	படமஞ்சரி
4	குறிஞ்சி	14	லலிதை
5	பூபாளம்	15	தோடி
6	வேளாவளி	16	தேசி
7	மலகரி	17	வசந்தம்
8	பௌளி	18	இராமக்கிரியை
9	சீகாரம்	19	குண்டக்கிரியை
10	இந்தோளம்	20	கூர்ச்சரி

21	வராளி	27	காம்போதி
22	கைசிகம்	28	கௌளி
23	மாளவி	29	நாட்டை
24	நாராயணி	30	தேசாக்ரி
25	பங்காளம்	31	காந்தாரி
26	தங்கியாசி	32	சாரங்கம்

---

8. விரிவுரைப் பகுதி

வெற்றி விழா

(கோவை கிழார்)

நமது நாட்டில் வழங்கும் விழாக்கள் பலவகைப்படும். அவைகள் எந்த நோக்கங்களைக் கொண்டு ஏற்பட்டனவோ அந்த நோக்கங்களை அறிந்து அவைகளை வகுத்துக் கூறலாம். வெற்றி, சமயம், நோன்பு, கோரிக்கை, விளைவின் ஈட்டம் முதலிய பல நோக்கங்களைக் கொண்டு நமது நாட்டு விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன. வெற்றி விழா - தீபாவளி, சமயவிழா – ஆவணியவிட்டம், நோன்பு விழா – பிள்ளையார் நோன்பு, கோரிக்கை விழா – கேதார கௌரி விரதம், விளைவின் ஈட்ட விழா – தைப் பண்டிகை என்பவை. அவைகளில் சில எடுத்துக் காட்டுக்களாகும். இவைகளில் வெற்றிவிழாவுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுத் தீபாவளி என்றும். அது வடநாட்டுத் திருவிழா. அண்மையிலே தென்னாட்டிற்கு வந்தது. என அறியவேண்டும். வடமொழிப் புராணங்களின்படி கண்ணபிரான் நரகாசுரன் என்ற அசுரன்மீது வெற்றிக் கொண்டதை பாராட்டும் விழா அது ஆகும். ஆகவே, அவ் விழாவை ஒரு வெற்றி விழா என்று கொள்ளவேண்டும். போரிலே வெற்றி

கொண்டதைக் கொண்டாடும் வகையில் பாணங்கள் வெடிகள் முதலிய ஆர்ப்பாட்டங்கள் செய்யப் படுகின்றன. அவைகள் வெற்றியின் அறிகுறிகள்.

இனி, தீபாவளி என்ற பெயரிலேயே வெற்றியின் அறிகுறி இருக்கிறது. அச்சொல் தீப + ஆவலி - என்ற இரண்டு சொற்களின் கூட்டுச்சொல் ஆகும். இச் சொற்களில் தீபம் என்றால் விளக்கு என்று பொருள், ஆவலி என்றால் வரிசை என்ற பொருள். ஆகவே அந்தக் கூட்டுச் சொல்லுக்கு விளக்குகளின் வரிசை என்பது பொருள். தீபாவளி என்ற பண்டிகையைக் கொண்டாடினால், விளக்குகளை வரிசையாக வைத்து அதனை அதன் அறிகுறியாகக் கொண்டு பாராட்டுதலே அப் பண்டிகையைச் சரியாகச் செய்யும் முறை ஆகும். அவ்விதமாக நாம் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடுகிறோமா ? இல்லை. பட்டாசு வெடிகளையும் மத்தாப்புக்களையும் கொளுத்துகிறோமே ஒழிய அன்று விளக்குகளை நாம் வரிசையாக வைப்பது இல்லை. பின் வேறு எவராவது அவ்வாறு விளக்குகளை வைத்துக் கொண்டாடுகிறார்களா என்று கேட்டால், ஆம்; மார்வாடிகள் அவ்வாறு கொண்டாடுகிறார்கள் என்று வடநாட்டு வியாபாரிகளின் கடைகளைப் பார்த்த நீங்கள் சொல்லுவீர்கள். அந்தப் பண்டிகை அவர்களுடைய பண்டிகை ஆதலாலும் அந்தப் பண்டிகையின்போதுதான் புதுவருடக் கணக்கை அவர்கள் தொடங்குகிறபடியாலும் அப் பண்டிகையின் உண்மைப் பொருளை அவர்கள் அறிந்து அவ்வாறு விளக்கு வரிசைகளை வைத்துக் கொண்டாடுகிறார்கள். அப் பண்டிகை தென்னாட்டுப் பண்டிகை அல்ல. ஆகையால் நாம் விளக்குகளை வைத்து அதனைக் கொண்டாடுவதில்லை.

நமது தென்னாட்டில் விளக்குகளை வரிசையாக வைத்துக் கொண்டாடும் வேறொரு பண்டிகை உண்டு. அது

கார்த்திகைப் பண்டிகை ஆகும். கார்த்திகை பௌர்ணமியில் மூன்று நாட்கள் நமது ஆலயங்களிலும் வீடுகளிலும் விளக்குகளை வரிசையாக வைத்து இறைவனை ஆராதனை செய்வோம். அந்தச் செயலுக்குத் தனித் தமிழ்ப் பெயர் ஒன்று இருந்தது. அது விளக்கீடு என்பது. திருஞான சம்பந்தப் பெருமான் "கார்த்திகை விளக்கீடு காணுதே போதியோ பூம்பாவாய்" என்று மயிலைத் தேவாரத்தில் அச் செய்தியையும் பண்டிகையையும் குறித்துப் பாடியிருக்கின்றார். அப் பண்டிகையில் விளக்கு வைத்தல்தான் தமிழ் நாட்டின் பண்டைய விழா வழக்கு ஆகும்.

இனி, விளக்கு வைத்தல் வெற்றிக்கு அறிகுறி என்றோம். விளக்கு ஒளியைக் காட்டும்; இருட்டைப் போக்கும். இருட்டு அறியாமை; ஒளி அறிவுடைமை. அறியாமையாகிய இருட்டை அறிவாகிய ஒளி நீக்கிவிடும். மூளையிலும் நெஞ்சிலும் அறியாமை இருக்கும் மட்டும் இருட்டே இருக்கும். அறிவு ஏற்பட்டால் ஒளி திகழும். ஒரு இருட்டறையில் இருந்தால் நமக்கு எந்தப் பொருளும் தெரியாது. அங்கே ஒரு விளக்கை ஏற்றினால் அவ்வறையில் உள்ள பொருள்கள் எல்லாம் தெரியும். அதுபோலவே நமது நெஞ்சில் இருள் மூடியிருந்தால் மடத்தன்மையில் மூழ்கியிருப்போம். அறிவு துலங்கினுல் மடத்தன்மை நீங்கி அறிவாளிகள் ஆவோம். ஆகவே மனதில் உள்ள இருட்டை நீக்கி அதனை வினவவைப்பது அறிவு எனும் ஒளிதான். இருட்டை ஒளி வெல்லுகிறது; அது வெற்றி என்க. ஆகவே விளக்கு வெற்றியின் அறிகுறி ஆகும்.

திருவண்ணாமலையில் ஆண்டுதோறும் நடைபெறும் கார்த்திகைத் திருவிழாவானது இந்த வெற்றியையே அறிகுறியாகச் சோதிசொரூபமாகக் காட்டப்படுகிறது. இரண்டு பேர் தம்மில் யார் பெரியவர்கள் என்று அகந்தையினுல்

போராடுகிறார்கள். நடுவில் ஒரு பெரிய உருவம் தோன்று கிறது. அதன் அடிமுடி தேடச் செல்லுகிறார்கள். முடிய வில்லை. அகந்தை என்ற இருள் அவர்களைச் சூழ்ந்திருக் கின்றது. அவ்வுருவம் சோதிமயமாகிறது. அதனைத் தொழுது ஈடேறுகிறார்கள். அவ்வுருவம் ஒளி மயமானது. அவ்வொளி அவர்களின் மன இருளை நீக்கி அறிவு ஒளி தருகின்றது. அவ்வாறு தோன்றிய அவ்வுருவத்தின் ஒளியே வெற்றியின் தன்மையைக் காட்டுகிறது. அதுவே வெற்றியின் அறிகுறி.

கொங்குநாட்டுக் கோயில்களில் எல்லாம் இரண்டு கம் பங்கள் உண்டு. ஒன்று பெரிய கோபுரத்திற்கு உட்புறம். மற்றொன்று அக் கோபுரத்திற்கு வெளிப்புறம். கோபுரத் திற்கு உட்புறம் இருக்கும் கம்பம் கொடிக் கம்பம் என்னப் படும். வெளிக்கம்பம் தீபக்கம்பம் என்னப்படும். உட் கம் பம் திருவிழாக் காலங்களில் முதற் செயலாகக் கொடி ஏற்றிவைப்பதற்கு உதவுவது. அதில் கொடிமட்டும் கட் டப்படும். வெளிக்கம்பம் கார்த்திகை விழாக்களிலும் மற்ற பெரு விழாக்களிலும் தீபம் ஏற்றுவதற்குப் பயன்படும். அப்போது வெகு தொலைவிலும் தெரியும்படியாக குங்கிலி யம், மட்டிப்பால், கற்பூரம் முதலிய எரிப் பொருள்களை யிட்டு ஒளிதிகழ ஏற்றுவார்கள். வெகு தொலைவில் இருக் கிற மக்களும் அது விசேடத்தின் (சிறப்புவிழா) அறிகுறி என்று அறிந்து கோயிலுக்குச் செல்லுவார்கள். இவ்வாறு செய்வது வெற்றியின் அறிகுறி.

போர்க் காலங்களிலும் மலைகளின் மீது நெருப்பு இட்டு வெற்றி அறிகுறி திகழச் செய்வது உண்டு. அது எல்லா நாடுகளிலும் உண்டு. அதுபோலக் கோயில் விழா வின் வெற்றிகாமான செய்கைக்குத் தீபஸ்தம்பம் பயன்

படுகிறது. இச் செய்தி கொங்கு நாட்டில் நடைபெறும் ஒரு சிறப்புச் செயல் ஆகும்.

மேல்நாட்டு உரோமானியர்கள் தாங்கள் படையெடுத்து வென்ற நாடுகளில் வெற்றி வளைவு (Victory Arch) களைக் கட்டிக் கொண்டாடினார்கள். நமது பாரத நாட்டிலோ வளைவுகளுக்கு மாறாக ஜெயத்தம்பம் அல்லது வெற்றிக் கம்பங்களை நாட்டிவந்தார்கள். அசோக அரசனுடைய கம்பங்கள் வெற்றிக் கம்பங்களே. டெல்லியில் குதுப்மினாருக்கு அருகில் உள்ள இரும்புத் தூண் ஒரு வெற்றித் தூணே ஆகும். இராஜபுதனத்துச் சிற்றூரில் உள்ள கோபுரம் போன்ற தூண் ஒரு வெற்றிக் கம்பமே ஆகும். தமிழ் நாட்டிலும் இப்படிப்பட்ட வெற்றிச் சின்னங்கள் இருந்தன. சோழனுடைய படைத்தலைவன் கருணாகரத் தொண்டைமான் கலிங்கத்துப் போரில் வெற்றி கொண்டு மகேந்திர மலையில் வெற்றித் தூணை நிறுவினான். இராசேந்திரச் சோழன் இலங்கையின்மீது படையெடுத்துச் சிங்களரை வென்று போலன்னறுவையில் ஒரு வெற்றித் தூணை நட்டு வந்தான் என்று வரலாறு கூறுகின்றது.

அதுபோலவே கொங்கு நாட்டு வெற்றிகளில் பல வெற்றித் தூண்களைக் காண்கிறோம். 13-ம் நூற்றாண்டிலே மாதப்பதண்ட நாயக்கன் நீலகிரியை வென்று அதன் அடிவாரத்தில் மாயாறும் பவானியும் கூடும்இடத்தில் தாணுக்கன் கோட்டையைக் கட்டி அதில் தன் வெற்றித் தூணை நட்டானும். ஒவ்வோரரசரும் நாடுகளைப் பிடிக்கும்போது கோயிலைப் புதுப்பித்து அதன் முன்னர் வெற்றித் தூணை நடுவதுண்டு. அதன் உச்சியில் பெரிய சோதி விளக்கு வைத்து எரிக்க ஏற்பாடு செய்வதுண்டு. அவ்வித ஏற்பாட்டினால் அது வெற்றித் தூண் ஆகிறது. கிராம தேவதை விழாக்களிலும் அக்கினி கம்பம் என்ற நெருப்புச்சட்டித் தூணை

வைப்பதில்லையா? அதுபோல இந்த வெற்றித் தூண்களும் ஏற்பட்டன. ஒளி வெற்றியைத் தருகிறபடியால் இந்த நெருப்புத் தூண்கள் வெற்றிக்கு அறிகுறிகளாக இருக்கின்றன. ஒரு விளக்கே யன்றி வரிசையாக விளக்குகள் இருந்தால் வெற்றியின் சிறப்பு விளங்கும். ஆகவே விளக்கீடு என்கிற தீபாவளி என்ற சொல்லின் பொருளும் அந்தப் பெயரில் வழங்கும் பண்டிகையும் ஒரு வெற்றிச் சின்ன விழா என்று அறிக.

சமாஜ அறிக்கை

சமாஜத்தின் 47 ஆவது ஆண்டு விழா ஈரோட்டில் நடத்துவதா? அன்றி வேறு பிற இடங்களில் நடத்துவதா? அப்படியானல் எங்கே நடத்துவது ? போன்ற மிக இன்றியமையாத செய்திகளைக் குறித்துத் தீர்மானிக்கவேண்டியிருத்தலால் நமது உறுப்பினர் பொதுக்கூட்டம் 25-10-52 சனி காலை 9-30 மணிக்கு, இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜனசபையின் "குகாநந்த நிலையத்"தில் நடைபெறும். அன்று போதிய கூட்ட நிறைவெண் இல்லாவிடில் அக் கூட்டம் அதே இடத்தில் அடுத்த நாள் 26-10-52 ஞாயிறு காலை அதே மணிக்குக் கூடி வருவோரைக் கொண்டு முடிவு செய்யும். கூட்டத்துக்கு வர இயலாதவர்கள் தங்கள் கருத்தைக் கடித வாயிலாக அறிவித் தருள்க.

செய்தித் திரட்டு

19 முதல் 26 வரை—திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி, கந்தவேள் கழகம் - கலைமகள் விழாப் பேச்சுகள்- பல பேராசிரியர்கள் தலைமையில் மாணவர்கள் பேசினார்கள்.

* * *

20 முதல் 28 வரை—திரிசிரபுரம் சைவசித்தாந்த சபை - கலைமகள் திருவிழா - திரு. இரத்தின முதலியார் திறப்பு. பல புலவர் பெருமக்கள் பேச்சுக்கள்.

* * *

21-9-52—அருநெறித் திருக்கூட்டம். ஈரோடு தொடக்க விழா - குன்றக்குடி மகாசன்னிதானம் தலைமை யில் நிகழ்ந்தது. மாலை கோவைகிழார் தலைமையில் அ. திருஞானசம்பந்த முதலியார் 'தேவர் குறளும் மூவர் தமிழும்' என்று பேசினார்கள்.

* * *

20-9-52—28-9-52வரை—திருவானைக்கா தேவஸ் தானம் - கலைமகள் திருவிழா - மாலை நேரங்களில் சொற் பொழிவுகளும் இரவுகளில் இன்னிசை அரங்குகளும் நடைபெற்றன.

* * *

26, 28-9-52—பெரியநாயக்கன் பாளையம் இராம கிருஷ்ண வித்தியாலயம், கலைமகள் திருவிழா—சொற் பொழிவுகள், போட்டிப் பரிசுகள், நாடகங்கள் நடைபெற் றன.

* * *

28-9-52—திருக்குறட் சொல்லடைவு அரங்கேற்று விழா. இராஜாஜி மண்டபம். பொருள் அமைச்சர் தலைமை யில் விழா நடைபெற்றது. திரு. வி. க. வாழ்த்துரை நிகழ்த்தினார்கள். ஆசிரியர் தமிழ்மணி சாமி வேலாயுதம் பிள்ளை அவர்கள் அரங்கேற்றுரையும் ஏனையோர்கள் மதிப் புரைகளும் நிகழ்த்தினார்கள்.

27, 28-9-52—கோவைத் தமிழ்ச் சங்கம் கலைமகள் விழா, பல அறிஞர்கள் பல சிறந்த பொருள்களைப் பற்றிப் பேச்சுகள் நிகழ்த்தினார்கள்.

* * *

கோவைத் தமிழ்ச் சங்கத்து வார நிகழ்ச்சிகள் :—

31-8-52—தெய்வத்தமிழ்—இராமசாமி அடிகள்

7-9-52—பண்டை வான நூல்—குப்பு லாலா

14-9-52—அம்புலிப் பருவம்—நடேச கவுண்டர்

21-9-52—தமிழர் வாழ்க்கை—இராமச்சந்திரன்

28-9-52—கலைமகள் விழா

* * *

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் 18-9-52 அன்று மறைமலை அடிகள் நினைவு விழாக் கொண்டாடப் பெற்றது. சித்தாந்தப் பேராசிரியர், பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் தலைமை தாங்கினார். புலவர் - மயிலை. சிவ. முத்து அடிகளின் படத்தைத் திறந்து வைத்தார். புலவர் - முருகவேள் B. O. L., தசரத இராமசாமி நாயுடு முதலானோர் அடிகளின் அருமை பெருமைகளை நன்கினிது விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

* * *

சிவநெறிச் செந்தமிழ்ப் பேராசிரியர், மறைமலை அடிகளாரின் இரண்டாம் நினைவு விழா 15-9-52 முதல் 21-9-52 வரை ஒரு வாரம், சென்னையிலுள்ள அரசியல் சார்பற்ற பல் வேறு கழகங்களின் சார்பில் கூட்டு முயற்சியாகக் கொண்டாடப் பெற்றது. பொதுக் கூட்டங்களும் ஊர்வலங்களும் படத்திறப்புக்களும் ஆங்காங்கே நிகழ்ந்தன. அடிகளின் நினைவுநாட் செயற்குழுவில் கலந்துகொண்ட இருபது கழகங்களின் சார்பில் பொது நிகழ்ச்சியாக, 21-9-52 அன்று

காலே பல்லாவரத் திருப்பயணம் நிகழ்ந்தது. ஏறக்குறைய அறுபேர் நக்கவர்கள் கலந்துகொண்டனர். அனைவரும் அடிகளின் "பொதுநிலைக் கழக மாளிகை"யையும், மணிமொழி நூலகத்தையும் கண்டு வணங்கி வியந்து மகிழ்ந்தனர்! ஆங்கு நடந்த பொதுக் கூட்டத்தில் செகப் பிரியரின் இல்லம்போல அடிகளின் மாளிகையும் புனித நினைவோடு போற்றப்படல் வேண்டும் எனவும், அவ்வூரும் தெருவும் முறையே "மறைமலை நகர்", "பொதுநிலைக் கழகத் தெரு" என்று வழங்குதல் வேண்டும் எனவும் பலர் ஆராமையோடு பேசினர். பின்னர் அன்று மாலே புரசை நகராண்மைக் கழகப்பள்ளியில் உயர்திரு. டாக்டர்-மனவாள ராமானுஜம் M. A., Ph. D., D. C. L., அவர்கள் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கட்சி வேறுபாடு கருதாது அதன்கண் பலரும் கலந்து கொண்டனர். திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, ப. ஜீவானந்தம், க. அன்பழகன், புலவர்-முருகவேள், ரம்போலோ மஸ்கானஸ், தசரத இராமசாமி, புலவர் - நன்னன் முதலானோர், பல தலைப்புக்களின்கீழ் அடிகளாரின் சிறப்புக்களை நன்கு விளக்கிப் பேசினர். விழா இனிது நிறைவேறியது.

* * *

சைதைத் திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக்கழக ஆறும் ஆண்டு விழாவும், மறைமலை அடிகளார் நினைவு விழாவும் 13, 14-9-52ம் நாள்களில் சிறப்புற நடைபெற்றன. உயர்திரு. டாக்டர். மா. இராசமாணிக்கம் M. A., L. T., M. O. L., Ph. D. அவர்களும், புலவர் - மயிலே. சிவமுத்து அவர்களும் முறையே இருநாட்களிலும் தலைமை ஏற்றனர். புலவர் - சண்முகம் பிள்ளை, முருகன் M. A., க. கோவிந்தராசனுர் B.A. (Hons)., B.T., செல்வரங்கம் B.Sc. முதலியவர்கள் சொற்பொழிவாற்றினர்.

சமாஜ வெளியீடுகள்

	ரூ.	அ.
பெரியபுராணம்—அகராதியுடன் ...	3	0
நாலாயிரதிவ்ய பிரபந்தம் ...	3	0
சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ...	1	0
திருவாசகம் மூலம் ...	0	4
திருப்போரூர்ச் சந்நிதிமுறை	0	12
திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு	7	0
சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் நீங்கலாக, தகளறுபோதம் (மூலம்) ...	0	8
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழி பெயர்ப்பல்ல. ...	0	2

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்)ஒன்று ஒரு ரூபா வீதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணா வீதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 53, Thiruvalluvar Street, Saidapet, Madras-15, P.I.Card No. M. S. 81.